வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

இலங்கை

# செயலாற்றுகை அறிக்கை

# 2012

©2013 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

செயலகம் (2 ஆம் மாடி)
த. பெ. இ 277
கொழும்பு 00100
இலங்கை

info@erd.gov.lk
http://www.erd.gov.lk

# உள்ளடக்கம்

## மேனோக்கு ப1

## நிறுவன கட்டமைப்பு ப2

உத்தியோகத்தர்களின் அபிவிருத்தி மற்றும் பயிற்சி

## வெளிநாட்டு நிதியளிப்பு ப4

வெளிநாட்டு நிதியின் அர்ப்பணிப்புக்கள்
வெளிநாட்டு நிதியின் பகிர்வுகள்
அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி
வெளிநாட்டு நிதியின் பயன்பாட்டு விகிதம்

## பிரிவுகள் மூலமான செயலாற்றுகை

### ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு ப8

இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக ஆசிய அபிவிருத்தி வங்கி
நாட்டின் பங்கேற்பு உபாயம் 2013-2015
2012 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்
2012 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்
2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

# உள்ளடக்கம் தொடர்ச்சி.....


**ஜப்பான் பிரிவு** ப11

துறை வாரியான கடன் தொகுதி ஆய்வு
2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டின் பகிர்வுகள்
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்
2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

**உலக வங்கிப் பிரிவு** ப16

2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டின் பகிர்வுகள்
2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகளும், உலக வங்கியின் தூதுவர் குழுக்களும்

**மத்திய கிழக்கும் சார்க் நாடுகளின் பிரிவும்** ப18

**மத்திய கிழக்கு பிராந்தியம்**

2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2007-2012 வரையிலான காலப்பிரிவின் அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டின் பகிர்வுகள்
2007-2012 வரையிலான காலப்பிரிவின் பகிர்வுகள்

**சார்க் நாடுகள்**

**இந்தியா**

2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2008 -2012 வரையிலான காலப்பிரிவின் துறை வாரியான அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும்

**இரு பக்க கிழக்குப் பிரிவு** ப24

**சீனா**

துறை வாரியான விநியோகம்

**கொரியா**

2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்
2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள்

# உள்ளடக்கம் தொடர்ச்சி.....


**இரு பக்க மேற்குப் பிரிவு** ப27

2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டில் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

**மனித வளங்களின் அபிவிருத்தியும், ஐக்கிய நாடுகள் பிரிவும்** ப30

**ஐக்கிய நாடுகள் பிரிவு** ப30

2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்
2012 ஆம் ஆண்டின் பகிர்வுகள்
2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் சுருக்கம்
2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்
நிகழ்நிலையிலான தன்னியக்கவாளர்களின் சேவை
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி (IFAD)
2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

**மனித வளங்களின் அபிவிருத்தி** ப34

கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் குழுப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் குழுப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

**பொருளாதார மற்றும் கொள்கை ஆய்வுப் பிரிவு** ப37

பொருளாதார மற்றும் கொள்கை ஆய்வுப் பிரிவின் பங்கு

2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

## நிதி ரீதியான மீளாய்வு ப39

**செலவினம் தொடர்பான நிதி ரீதியான தகவல்கள்**
**முற்பணக் கணக்குகள்**
**கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகள்**
**2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு**

**இணைப்பு** ப*I-V*

# தூர நோக்கு

உயர்வான நடுத்தர வருமானத்தை அடைவதற்கு நாடு எழுச்சியூட்டப்பட்டதன் காரணமாக இலங்கையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதிகளைத் திரட்டுவதன் மூலமும், முகாமைத்துவம் செய்வதன் மூலமும் தேவையான அறிவு, மற்றும் நிபுணத்துவ ரீதியாக சிறந்த தரத்தை அடைதல்

# செயற்பணி

நாட்டின் நீண்ட கால கடனின் நிலைபேறான தன்மையை பேணும் அதே வேளை, “ மகிந்த சிந்தனை “ புதிய ஓர் இலங்கைக்கான எதிர்கால நோக்கின் ஆதரவுடன் குறைந்த சாத்தியமான செலவில் வெளிநாட்டு நிதியினைத் திரட்டல்

# நோக்கங்கள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள துறைகளின் அபிவிருத்தித் தேவைகளுக்கு நிதி வழங்குவதற்கு குறைந்த செலவுடனும், குறைவான இடருடனும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுதல் இலங்கை ஆசியாவின் ஆச்சரியங்களுள் ஒன்றாக உருவாகி வருகின்றது.

- வெளிநாட்டு வளங்களை வினைத் திறனுடையதாகவும், பயனுறு விளைவுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு வசதியளித்தல்.

- நாட்டின் நீண்ட கால கடன்களை தாங்கிக் கொள்ளக் கூடிய தன்மையை பேணுவதற்குப் பங்களிப்புச் செலுத்துதல்.

- வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வினைத்திறனான பயன்பாட்டின் மூலம் அரச துறையின் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்துதல்.

- திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புகளை பயனுறு விளைவுள்ளதாகவும், செயற்திறன் கொண்டதாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தின் திறன்களை மேலும் வலுவூட்டுதல்.

# எமது விழுமியங்கள்

சகல சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்தல் மற்றும் சிறந்த குண நலன்களோடு இணங்கி நடப்பதன் ஊடாகவும், ஆளுமை, தெளிவாகத் தெரியும் தன்மை, வெளிப்படுத்துகை, மற்றும் ஒழுக்க நெறிகளின் அதி உயர் தரத்தைப் பேணுதல்

திணைக்களத்தின் அக்கறையை முன்னிறுத்தி அதி உயர் தரமான தனிப்பட்ட நேர்மையைப் பேணுதல்

பணிக் குழுவினரின் செயலாற்றுகைகளை வெளிக்காட்டக் கூடியவாறான பரஸ்பர மதிப்பு மற்றும் நம்பிக்கைக்கான சூழலை ஏற்படுத்தி பூரணமான சாத்தியங்களை நிறைவேற்றுதல்.

நாணயப் பொருளாளர்களுடன் உண்மையானதும், நியாயமானதுமான தொடர்புகளின் ஊடாக ஒழுக்க நெறிகளின் நீண்ட கால உறவுகளை வளர்ச்சியடையச் செய்தல்.

சகல மட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு அதிகாரமளித்தல், தலையீடுகளைக் குறைத்தல், மற்றும் அவர்களை கடமைப் பொறுப்புள்ளவர்களாக இருக்குமாறு வேண்டுதல்.

# மேனோக்கு

மகிந்த சிந்தனை அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்தின் பிரகாரம், நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளிக்கும் முகமாக சிறந்த முறையில் அபிவிருத்தியடைந்த சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வலையமைப்பிற்கான தேவையினை இனங்கண்டு, 2005 ஆம் ஆண்டிலிருந்து உட்கட்டமைப்பின் அபிவிருத்தியானது அரசாங்கத்தின் முன்னுரிமை பெற்ற ஒரு துறையாக இருந்து வந்துள்ளது. இதன் கீழ் அரசாங்கமானது பெருந்தெருக்கள், போக்குவரத்து, சக்தி, வலு, துறைமுகங்கள், விமானப் போக்குவரத்துத் துறை, புகையிரத வீதிகள், நீர்ப்பாசனம், நீர், துப்புரவாக்கல் மற்றும் நகர மயமாக்கல் அபிவிருத்தி உட்பட பெரும்பாலும் சகல பொருளாதார உப துறைகளின் மீதும் பாரிய முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. சிறிய நீர்ப்பாசனம், அணுகு வீதிகள், சமூக நீர், சந்தை இடங்கள், பாடசாலைகள், சுகாதார நிலையங்கள், கிராமிய மின்சாரமயமாக்கம் போன்றன கிராமிய அபிவிருத்தி உபாயங்களின் மத்திய நிலைக்கு எடுத்துச் செல்கின்றது.

2009 ஆம் ஆண்டில் நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த நெருக்கடியான நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்ததிலிருந்து கணிசமான அளவிலான உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்கள், கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகள், மற்றும் மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காக அப்பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் சிறந்த முறையில் ஒன்றிணைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தியை மேம்படுத்துதல் போன்றன அரசாங்க அபிவிருத்தி உபாயத்தின் பிரதான ஒரு சேர்க்கையாக மாறியுள்ளன.

2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் வெளிநாட்டு நிதியின் பங்கேற்பானது, பல் பக்க பங்கேற்பாளர்களாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி போன்றனவற்றையும், பிரதான இரு பக்க பங்கேற்பாளர்களாக ஜப்பான், இந்தியா, சீனா, கொரியா, மேற்கு நாடுகள், மற்றும் மத்திய கிழக்குப் பிராந்தியம் போன்றவனவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

வருமானக் கணக்கின் விருத்தியின் ஊடாக வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகக் குறைப்பொன்றினை நோக்கிய அரசிறை சீர்திருத்தங்களை ஒன்றிணைக்கும் அதே வேளை, காணப்படும் வரையறுக்கப்பட்ட அரசிறை இடைவெளிக்குள், அரசாங்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6 – 7 சதவீத பொது முதலீட்டினைப் பேணுவதற்குக் கட்டுப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட உள்நாட்டு வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரிய பொது முதலீடுகளுடனான சென்மதி நிலுவைச் சவால்களுக்கு மத்தியில், அரசாங்கம் நீண்ட கால வெளிநாட்டு நிதியீட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக அவ்வாறான அபிவிருத்திச் செலவுகளுக்கான நிதியீட்டத்துக்கான தொடர்ச்சியான அபிவிருத்திப் பங்கேற்பிற்கு வழிவகுத்துள்ளது.

இலங்கை நடுத்தர வருமானப் பொருளாதாரம் ஒன்றை உடைய நாடொன்றாக முன்னேற்றமடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக, கடந்த இரண்டு தசாப்த காலமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள், ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் உலக வங்கி போன்றவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியிலும், மற்றும் அபிவிருத்திக்கான நன்கொடை உதவி மற்றும் சலுகை அடிப்படையிலான நிதியீட்டம் போன்றவற்றில் படிப்படியான வீழ்ச்சி ஏற்பட்டது.

இப்பின்னணிக்கு மாறாக, வெளிநாட்டு நிதியீட்ட ஏற்பாடுகளில், கடனின் சேவைகள், சென்மதி நிலுவையில் ஏற்படக் கூடிய நிலைமைகள், மற்றும் முதிர்வுக் கட்டமைப்பு, போன்றவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான கருத்திட்ட நிதியீட்ட முறைமைகளை அரசாங்கம் தயாரித்துள்ளது. அதன் விளைவாக அரசாங்கமானது தனியார் துறையின் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், பொருட்களினதும், சேவைகளினதும் ஏற்றுமதியை உருவாக்குவதற்கும் இன்றியமையாததாக விளங்கும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நீண்டகால நிதியினைத் திரட்டும் வழிகளை நோக்கி படிப்படியாக நகர்ந்துள்ளது. பல் வகைப்பட்ட கடன் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளைக் கருத்திற் கொண்டு, அரசாங்கமானது மொத்தக் கடன்களினதும் செலவை தாங்கிக் கொள்ளக்கூடிய மட்டமொன்றிற்கு வைத்திருக்கும் பொருட்டு, பல பக்க மற்றும் இரு பக்க நிதி மூலங்களில் இருந்தும் மற்றும் நிதிச் சந்தைகளில் இருந்தும் சலுகைக் கடன்கள் மற்றும் சலுகையற்ற கடன்களை பெற்று ஒரு சிறப்பான கடன் கலவையை பேண முடிந்துள்ளது.

இவ்வாறு செய்வதனால், அரசாங்கமும் ஒரு பக்கம் அதிகரித்த பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத் துறை போன்றவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ளக் கூடிய அந்நியச் செலாவணி உழைப்பின் இயலளவிற்கும் மறு பக்கம் கனரக கைத்தொழில்கள், உணவு, பாற்பண்ணை, சீனி, மென்ரக பொறியியல், மருந்துப் பொருட்கள், புடவை, புத்துயிரூட்டக் கூடிய சக்தி, போன்ற இறக்குமதிப் பதிலீட்டிலிருந்தான அந்நியச் செலாவணி உழைப்பிற்கும் வழி வகுக்கக் கூடிய பொருளாதார உட்கட்டமைப்பின் நிதியீட்டத்திற்கான அவ்வாறான நிதியீட்டத்திற்கு வழிகாட்டியுள்ளது. இதன் பலனாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உயர் வளர்ச்சி, மொத்த உள் நாட்டு உற்பத்திக்கான வெளிநாட்டுக் கடன் 2002 ஆம் ஆண்டில் 56.3 சதவீதத்திலிருந்து 2012 ஆம் ஆண்டில் 47.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது

கிடைக்கக் கூடிய வெளிநாட்டு நிதியினைப் பயன்படுத்துவதற்கு மேலதிகமாக, பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குக் கிடைக்கக் கூடிய உள்நாட்டு நிதியின் ஆதரவினை விரிவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நீண்ட காலக் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு வங்கிகளின் வரிச் சேமிப்புக்களைப் பயன்படுத்துவதற்காக 2011ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணையின் பிரகாரம், வர்த்தக வங்கிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதலீட்டு நிதிக் கணக்குகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக தொழில் முயற்சிகள், மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், போன்றவற்றிற்கான அபிவிருத்தி நிதிக்கான சிறந்த அடைவினை தற்போது வழங்கி வருகின்றது

இலங்கை அரசாங்கமானது ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அவர்களது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கான மானியங்களையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கியுள்ளது. பல்வேறு அமைச்சுக்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் காணப்படும் தொழில்சார் பயிற்சி, வறுமை ஒழிப்பு, கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்தல், கல்வியில் முன்னேற்றம், சுகாதாரம், நீர்ப்பாசனம், நிர்மாண நடவடிக்கைகள், வங்கித் தொழிலும் மற்றும் கணக்கீடும் சேவைகள் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்நுட்ப உதவி மற்றும் சிறிய கருத்திட்ட நிதியீட்டம் போன்றவற்றின் ஊடாக நட்பு நாடுகளுடனான எமது வெளிநாட்டு பொருளாதார உறவுகளைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

# நிறுவன கட்டமைப்பு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இயங்குவதோடு, அவருக்கு உதவியாக ஒரு மேலதிகப் பணிப்பாளர் நாயகமும், 6 பணிப்பாளர்களும் பின்வரும் பிரிவுகளுக்கு பொறுப்பாக உள்ளனர்.

- ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு
- உலக வங்கிப் பிரிவு
- ஜப்பான் பிரிவு
- இரு பக்க மேற்குப் பிரிவு
- இரு பக்க கிழக்குப் பிரிவு
- மத்திய கிழக்கு நாடுகளும், சார்க் நாடுகள் பிரிவும்
- மனித வளங்களின் அபிவிருத்தியும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்களின் பிரிவும்
- பொருளாதார மற்றும் கொள்கை ஆய்வுப் பிரிவு
- நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதவியணியினரின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது

**2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று பதவியணியினரின் விபரங்கள்**

| பதவியணி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உண்மையான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பதவி நிலை உத்தியோகத்தர்கள் | 48 | 31 | 17 |
| துணை நிலை ஊழியர்கள் | 64 | 40 | 24 |
| சிற்றூழியர்கள் | 29 | 24 | 05 |
| மொத்தம் | **141** | **95** | **46** |

நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகள் திணைக்களத்தின் சுமுகமான செயற்பாட்டுக்குத் தேவையான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குகின்றன. இச்சேவைகள் பௌதீக மற்றும் மனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியோடு இணைந்தனவாகும். வருடாந்தம் திணைக்களத்தின் பௌதீக வளங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, 2012ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 32 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டது. 2012ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைவதில் திணைக்களத்துக்கு இது சவாலாக அமைந்தது. இவ்வெற்றிடங்கள் இருந்தாலும் கூட, திணைக்களமானது 2012 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளதோடு, அதி உயர் அர்ப்பணிப்புக்களையும், பகிர்வுகளையும் அறிக்கையிட்டுள்ளது.

# உத்தியோகத்தர்களின் அபிவிருத்தி மற்றும் பயிற்சி

2012 ஆம் ஆண்டில், உத்தியோகத்தர்களின் இயலளவு அபிவிருத்தி மற்றும் அவர்களின் செயற்திறனை விருத்தி செய்வதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக மனித வள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ளது. வழங்கப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் பின்வருமாறு

**பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி கணிப்பீட்டு செயலமர்வு | 1 |
| ராஜ தந்திர பயிற்சி தொடர்பான பொதுநலவாய பிராந்திய நிகழ்ச்சித் திட்டம் | 1 |
| பெண்களும், தொழில் முயற்சி அபிவிருத்தியும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 1 |
| ஜப்பானிய உத்தியோகபூர்வ உதவிக் கருத்திட்டங்களின் கணிப்பீடு தொடர்பான மாநாடு | 1 |

திணைக்களத்தின் நிர்வாக மற்றும் உதவி அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான தேவையை இனங்கண்டு, 2012ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவிச் சேவை மற்றும் ஆதரவான சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான உள்ளூர் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. பின்வரும் அட்டவணை அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட துறைகள் தொடர்பான விபரங்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

**உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள்**

| பயிற்சி வழங்கப்பட்ட பாடம் | பயிற்சி அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆங்கில மொழி | 1 |
| அலுவலக முகாமைத்துவம் | 8 |
| நல்லாட்சியும், மனித வள முகாமைத்துவமும் | 2 |
| களஞ்சியப்படுத்தல் | 3 |
| காரியாலய உதவியாளரின் பங்கு | 14 |
| சாரதிப் பயிற்சி | 3 |
| சம்பள முகாமைத்துவ முறைமை - 2012 | 1 |
| சிறந்த வர்த்தக எழுத்து | 7 |
| சம்பள மாற்றல்கள் | 1 |
| போக்குவரத்து முகாமைத்துவம் | 1 |

# வெளிநாட்டு நிதியளிப்பு

பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதே இத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாகும். அதன் பிரகாரம், வெளிநட்டு வளங்கள் திணைக்களத்தின் ஈடுபாட்டுடன் அரசாங்கம் ஏனைய நாடுகளுடனும், நிறுவனங்களுடனும் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்களின் சுருக்கமும் அவற்றின் பயன்பாடும், 2012 ஆம் ஆண்டிற்கான கடன் சேவைக் கொடுப்பனவுகளும் இவ்வத்தியாயத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நிதியின் அர்ப்பணிப்புக்கள்

வெளிநாட்டு நிதியீட்டத்தின் அர்ப்பணிப்பானது 2006 - 2012 வரையிலான காலப்பகுதியில் 19 சதவீத வருடாந்த சராசரி விகிதத்தால் படிப்படியாக அதிகரித்துள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நிதியின் பிரதான பகுதியானது வீதிகள், கடுகதிப் பாதைகள், பாலங்கள், சக்தி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் புகையிரத வீதிகள் உள்ளடங்கலாக பாரிய அளவிலான பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது

2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில பிரதான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான நிதி அர்ப்பணிப்புடன் ஒப்படும் போது 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சகல விதமான மொத்த நிதி அர்ப்பணிப்புக்களும் ஓரளவு குறைக்கப்பட்டிருந்தாலும் கூட, இது 2012 ஆம் ஆண்டில் திரும்பவும் அதிகரித்திருந்தது.

2012 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பங்காளர்களினாலும், கடன் வழங்கும் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதி அர்ப்பணிப்புக்களின் மொத்தப் பெறுமதி ஐ அ டொ 3,152 மில்லியன்களாக இருந்ததோடு, அதில் கருத்திட்டக் கடன்களுக்கான நிதி ஐ அ டொ 2,789 மில்லியன்களாகவும் மற்றும் நன்கொடை நிதியானது ஐ அ டொ 363 மில்லியன்களாகவும் இருந்தது. 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான மொத்த அர்ப்பணிப்புக்களில் 33 சதவீதமானது சீனாவினாலும், 22 சதவீதம் இந்தியாவினாலும், 17 சதவீதம் ஜப்பானினாலும், 11 சதவீதம் உலக வங்கியினாலும், ஆசியா அபிவிருத்தி வங்கியும் , மற்றும் நெதர்லாந்தும் தனித்தனியாக 3 சதவீதத்தினையும் வழங்கியிருந்த அதே வேளை, மொத்த அர்ப்பணிப்புக்களில் எஞ்சிய 14 சதவீதமும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**2012இல் அபிவிருத்திப் பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதி அர்ப்பணிப்புக்கள் (ஐ அ டொ மில்லியன்)**

| அபிவிருத்திப் பங்காளர் | கடன் | நன்கொடை | மொத்தம் |
|---|---|---|---|
| ***இரு பக்க*** | **2,302.47** | **283.04** | **2,585.51** |
| சீனா * | 1,056.05 | 0.16 | 1,056.21 |
| பிரான்ஸ் | 28.29 | | 28.29 |
| ஜேர்மன் | 34.42 | 5.27 | 39.69 |
| இந்தியா | 443.06 | 257.28 | 700.34 |
| ஜப்பான் ** | 508.74 | 15.23 | 523.97 |
| கொரியா | 11.13 | | 11.13 |
| நெதர்லாந்து | 102.50 | 0.00 | 102.50 |
| சவூதி அரேபியா | 60.00 | - | 60.00 |
| ஸ்பெய்ன் | 14.14 | 0.00 | 14.14 |
| ஐக்கிய அமெரிக்கா | | 5.10 | 5.10 |
| ஐக்கிய இராச்சியம் | 44.14 | 0.00 | 44.14 |
| **பல பக்க** | **486.53** | **80.97** | **567.50** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 99.68 | - | 99.68 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | 22.03 | 0.00 | 22.03 |
| சர்வதேச அபிவிருத்திக்கான வெளிநாட்டு நிதி | 40.00 | - | 40.00 |
| ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் | 0.00 | 68.98 | 68.98 |
| உலக வங்கி | 324.82 | 10.49 | 335.31 |
| **மொத்தம்** | **2,789.00** | **362.51** | **3,151.51** |

** அரசாங்க உத்தரவாதத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான போக்குவரத்து சேவைகள் கம்பனியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்*
***அரசாங்க உத்தரவாதத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்*
*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

## வெளிநாட்டு நிதியின் பகிர்வுகள்

2012ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநாட்டு நிதியின் மொத்தப் பகிர்வுத் தொகை ஐ. அ. டொ. 1, 986 மில்லியனாக இருந்ததோடு, அத்தொகையில். ஐ. அ. டொ. 1,835 மில்லியன் அல்லது 92 சதவீதம் கருத்திட்டக் கடன்களில் இருந்து பகிரப்பட்டிருந்ததோடு, எஞ்சிய ஐ. அ. டொ. 151 மில்லியன் அல்லது 8 சதவீதம் வெளிநாட்டு நன்கொடைகளில் இருந்து பகிரப்பட்டிருந்தது.

2012ஆம் ஆண்டின் மொத்தப் பகிர்வில் 24 சதவீதம் அல்லது ஐ அ டொ 484 மில்லியன் சீனாவினால் நிதி உதவி வழங்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கே பகிரப்பட்டிருந்தது இந்நிதி முன்னுரிமை வழங்கப்பட்ட வீதிகள் கருத்திட்டத்தின் விருத்தி, புனர் நிர்மாணம், வடக்கு வீதிகளின் புனருத்தாரண கருத்திட்டம், மற்றும் கொழும்பு கட்டுநாயக்கா கடுகதிப்பாதைக் கருத்திட்டம் ஆகிய பிரதான கருத்திட்டங்களுக்கே அவ்வுயர்வான பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொத்தப் பகிர்வில் 19 சதவீதம் அல்லது ஐ. அ. டொ. 396 மில்லியன் பாரிய கொழும்பு நகர்ப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (ஐ. அ. டொ. 72 மில்லியன்), மற்றும் உயர் கொத்மலை நீர் மின்சாரக் கருத்திட்டம் (ஐ. அ. டொ. 67 மில்லியன்) போன்ற ஜப்பானினால் நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கே பகிரப்பட்டிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஆதரவு வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான பகிர்வுகள் ஐ. அ. டொ. 302 மில்லியனாக (மொத்தப் பகிர்வில் 15 சதவீதம்) அவை பிரதானமாக கொழும்புத் துறைமுக விரிவாக்கக் கருத்திட்டம் மற்றும் தூய சக்தி மற்றும் அடைவு விருத்திக் கருத்திட்டம் ஆகியனவற்றுக்கே வழங்கப்பட்டிருந்தன. 2012ஆம் ஆண்டில் இந்தியா, உலக வங்கி, மற்றும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களினாலும், மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களினாலும் நிதி உதவி வழங்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள் முறையே 14, 8 மற்றும் 20 சதவீதமாகும்.

## அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி

2012ஆம் ஆண்டு இறுதியில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாது காணப்பட்ட மொத்த மீதி ஐ.அ.டொ 7,145. மில்லியனாக இருந்தது. இத்தொகையில் ஜப்பானினால் நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிதியில் 20 சதவீதம் அல்லது ஐ.அ.டொ 1,395 மில்லியனையும், சீனாவினால் நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிதியில் 18 சதவீதம் அல்லது ஐ.அ.டொ 1,291 மில்லியனையும் அது பிரதிபலித்தது

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டு ஆனால் பகிரப்படாத தொகை ஐ.அ.டொ 1,065 மில்லியனாகவும் (மொத்தப் பெறுமதியில் 15 சதவீதம்), இந்தியாவினாலும், மற்றும் உலக வங்கியினாலும் நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நிதியில் பகிரப்படாத தொகை முறையே ஐ.அ.டொ 873 மில்லியனையும் (12 சதவீதம்) மற்றும் ஐ.அ.டொ 676 மில்லியனையும் (9 சதவீதம்) பிரதிபலித்தது.

## வெளிநாட்டு நிதியீட்டின் பயன்பாட்டு வீதம்

குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப, சராசரி நடைமுறைப்படுத்தல் காலப்பிரிவு 4 – 5 வருடங்களாக இருப்பின், மொத்தப் பயன்பாட்டின் திருப்திகரமான மட்டம் 20 - 25 சதவீதத்துக்கு இடையில் இருக்க வேண்டும். பெறுகை, வினைத் திறனான காசுப்பாய்ச்சல் ஏற்பாடுகள், பொருளாதார உட்கட்டமைப்பு கருத்திட்டங்களின் நிதி இடைவெளியினையும், மற்றும், வரவு செலவுத் திட்ட முகாமைத்துவத்தில் சிறந்த திறைசேரி செயற்பாடுகளையும் இனங்காண்பதற்குமான வர்த்தக ரீதியான கடன்களைப் பயன்படுத்தல், உட்பட கருத்திட்ட முகாமைத்துவ முறைமையினை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தினாலும், அபிவிருத்திப் பங்காளர்களினாலும் எடுக்கப்பட்ட தீர்வு முறைமைகளினால் கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் கருத்திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியீட்டத்தின் பயன்பாட்டு விகிதம் படிப்படியாக அதிகரித்துள்ளது.

பயன்பாட்டு வீதம் - 2012

| அபிவிருத்திப் பங்காளர் | பயன்பாட்டு வீதம் % |
|---|---|
| இரு பக்க | **21.30** |
| ஜப்பான் | 20.37 |
| சீனா | 22.62 |
| இந்தியா | 25.48 |
| நெதர்லாந்து Ex) | 23.31 |
| சுவீடன் (Ex) | 100.00 |
| ஐக்கிய இராச்சியம் (Ex) | 92.59 |
| டென்மார்க் (Ex) | 21.44 |
| பிரான்ஸ் | 70.34 |
| கொரியா | 30.75 |
| அவுஸ்திரேலியா (Ex) | 32.79 |
| ஓஸ்ட்ரியா (Ex) | 80.43 |
| ஏனைய இரு பக்க அபிவிருத்திப் பங்காளர்கள் | 8.19 |

| | |
|---|---|
| **பல பக்க** | **25.27** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 24.95 |
| உலக வங்கி | 21.66 |
| ஏனைய பல பக்க அபிவிருத்திப் பங்காளர்கள் | 37.07 |
| **மொத்தம்** | **22.28** |

## வெளிநாட்டுக் கடன் தொகுதியும், வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்தலும்

2012ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த வெளிநாட்டுக் கடன் ஐ. அ.டொ. 20.3 பில்லியன்களாக இருந்ததோடு, அத்தொகை கடந்த பத்து ஆண்டுகளாக சராசரி 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டுக் கடன் தொகுதி 13.6 ஐ அ டொ பில்லியன் (68 சதவீதம்) சலுகை அடிப்படையிலான கடன்களைக் கொண்டிருந்த அதே வேளை, எஞ்சியவை 6.7 ஐ அ டொ பில்லியன் (32 சதவீதம்) வர்த்தகக் கடன்கள் உட்பட சலுகை அடிப்படையிலல்லாத கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

**வெளிநாட்டுக் கடன் சேர்க்கைகள்**

| சேர்க்கைகள் | ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் (ஐ அ டொ மில்லியன்) | | | மொத்த வேறுபாடு (ஐ அ டொ மில்லியன்) | | வேறுபாடு சதவீதங்களில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 |
| பல பக்க | 6,085 | 6,341 | 6,639 | 257 | 298 | 4.2 | 4.7 |
| இரு பக்க | 6,439 | 7,002 | 7,160 | 563 | 157 | 8.7 | 2.2 |
| ஏற்றுமதிக் கடன்கள் | 1,801 | 2,252 | 2,965 | 452 | 713 | 25.1 | 31.6 |
| வர்த்தக | 2,038 | 3,034 | 3,530 | 996 | 496 | 48.9 | 16.4 |
| **மொத்த வெளிநாட்டுக் கடன்** | 16,362 | 18,629 | 20,293 | 2,267 | 1,664 | 13.9 | 8.9 |

*1 விகிதம் கருத்திட்டத்தின் சராசரி ஆயுளையும் மற்றும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தலின் வினைத்திறனையும் விளக்குகிறது. புயன்பாட்டு விகிதம் மொத்தப் அர்ப்பணிக்கப்பட்: பகிரப்படாத மீதிக்கான மொத்த பயன்பாட்டு விகிதத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது.*

2011ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் கடனான 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டு காலப்பிரிவில் இது சுமார் 9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு இறுதியில் ஜப்பானினால் வழங்கப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் 29 சதவீதத்தையும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன் 22 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தின. மொத்த வெளிநாட்டுக் கடனில் சுமார் 17 சதவீதம் உலக வங்கியிலிருந்து கிடைக்கப் பெற்ற கடன்களாக இருந்த அதே வேளை, சீனாவிலிருந்து கிடைக்கப் பெற்ற கடன்கள் 13 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தின. மொத்த வெளிநாட்டுக் கடனில் எஞ்சிய 19 சதவீதத்தையும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களிமிருந்தும் பெற்றுக் கொண்ட கடன்களை உள்ளடக்கியிருந்தது.

2012இல் மொத்த வெளிநாட்டுக் கடன் சேவை, 2007ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரச பிணைகளில் ஐ அ டொ 500 முதிர்வுகள் உட்பட ஐ அ டொ 1,635 மில்லியனாகும். மொத்த கடன் மீள் கொடுப்பனவில் முதலாவது மீள் கொடுப்பனவு ஐ அ டொ 1,197 மில்லியனாகவும், மற்றும் வட்டிக் கொடுப்பனவு ஐ அ டொ 438 மில்லியனாகவும் இருந்தன.

# பிரிவுகள் வாரியான செயலாற்றுகை

# ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு

## இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியானது பல் பக்க அபிவிருத்திப் பங்காளர்களுள் மிகப் பிரதான பங்காளராக விளங்குவதோடு, அவ்வங்கி 45 வருடங்களுக்கு மேலாக இலங்கையுடன் வினைத்திறனான உறவு முறையினைப் பேணி வந்துள்ளது. 1966 ஆம் ஆண்டில் இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இவ்வங்கியானது 157 கடன்களின் ஊடாக 5.6 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களையும், 249 தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக 118 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கை தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து வருடாந்தம் சுமார் ஐக்கிய அமெரிக்க டொலர் 300 மில்லியன்களைப் பெற்றுக் கொள்கின்றது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7 – 0.8 சதவீதமாக உள்ளது.


## நாட்டு பங்கேற்பு உபாயம் 2013 - 2015

2013 – 2015ஆம் அண்டுகளுக்கான இடைக்கால நாட்டு பங்கேற்பு உபாயமானது இலங்கை அரசாங்கத்தினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் பங்கேற்புடன் 2012 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டது. அது பிரதானமாக (i) பூரண மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி (ii) ) தனியார் முதலீட்டினை ஊக்குவித்தலும், பொது முதலீட்டின் வினைத் திறனை அதிகரித்தலும் (iii) மனித வள மற்றும் அறிவு அபிவிருத்தி ஆகிய துறைகளின் மீது கவனம் செலுத்துகின்றது. அதற்கு ஏற்ப, இது நாட்டின் மாற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, திறன் அபிவிருத்தி, போக்குவரத்து சேவைகளின் உகப்பாக்கம், நிலையான சக்தி, போன்ற நடுத்தர வருமான நாடுகளின் முன்னுரிமை வாய்ந்த செயல்திட்டங்களை அபிவிருத்தியாக இத்துறைகளின் விளிப்பத்தலானது துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட அவ்வாறான சேவைகளுக்கான உயாந்த அளவிலான கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு இத்துறைகளின் அபிவிருத்தி மிக இன்றியமையாததாக இருந்தமையேயாகும். இதன் பிரகாரம், இலங்கை சலுகை அடிப்படையிலானதும், மற்றும் சலுகை அற்ற இறுக்கமான வட்டி வீதங்களின் கீழ் வருடாந்தம் சுமார் ஐ. அ. டொ. 300 மில்லியன்களைப் பெற்றுக் கொள்ளும். 2013 – 2015 ஆண்டு காலப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையான ஐ அ டொ 926 மில்லியன்களில் கணிசமான அளவிலான பங்கு திறன் அபிவிருத்தி மற்றும் சக்தித் துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்

## 2012 இன் அர்ப்பணிப்புக்களும் பகிர்வுகளும்

2012 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்பு ஐ அ .டொ. 392 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இவ்வர்ப்பணிப்புக்கள் மின்சக்தி மற்றும் வலுத்துறைக்கான ஐ.அ.டொ. 130 மில்லியன், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறைக்கான ஐ.அ.டொ. 124 மில்லியன், போக்குவரத்துத் துறைக்கான ஐ.அ.டொ. 98 மில்லியன் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பின்வரும் வரைபு 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் ஆசிய அபிவிருத்தியின் துறை வாரியான கடன் தொகுதியை விளக்குகின்றது. தற்போதைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி 30 கடன்களையும், 10 நன்கொடைகளையும் உள்ளடக்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இக்கடன்களின் கீழான மொத்தப் பகிர்வு ஐ அ டொ 301,952,633.24 ஆகும்.


2012 இல் துறை வாரியான பகிர்வு



## 2012 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதியானது பாரிய ஒரு துறையாக வீதிகளும் போக்குவரத்துடனும் அதனைத் தொடர்ந்து பிராந்திய அபிவிருத்தித, நீர் வழங்கல், துப்புரவாக்கல், துறைமுகம், சக்தியும் வலுவும், கல்வியும் திறன்களின் அபிவிருத்தியும், நிதியும் அரசிறை முகாமைத்துவமும், உட்பட பல் துறை உள்ளடங்கலாக 7 துறைகளில் முதலிடப்பட்டுள்ளது. பின்வரும் வரைபு 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் துறை வாரியான கடன் தொகுதியை விளக்குகறது.

துறை வாரியான ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் விறியோகம் (ஐ அ டொ மில்லியன்)




## 2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐ.அ.டொ. மி |
|---|---|
| கொழும்புத் துறைமுக விரிவாக்கக் கருத்திட்டம் | 300 |
| தெற்குப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (குறைநிரப்பு) | 90 |
| தூய சக்தி, அடைவு விருத்திக் கருத்திட்டம் | 160 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 154 |
| தேசிய நெடுஞ்சாலைகள் துறைக் கருத்திட்டம் | 150 |
| இரண்டாந்தர நகரங்களின் கிராமிய சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 120 |
| மோதலினால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர கருத்திட்டம் | 150 |
| நிலையான சக்தித் துறை ஆதரவுக் கருத்திட்டம் | 120 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 100 |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | 90 |
| தேசிய நெடுஞ்சாலைகள் துறைக் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | 85 |
| கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதிக் கருத்திட்டம் | 70 |
| அறிவு சார்ந்த சமூகத்துக்கான கல்விக் கருத்திட்டம் | 65 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 60 |
| அரசிறை முகாமைத்துவ வினைத் திறன் கருத்திட்டம் | 50 |
| உள்ளூராட்சி மன்ற விரிவாக்கல் துறைக் கருத்திட்டம் | 55 |

## 2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்

2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐ.அ.டொ. மி |
|---|---|
| தூய சக்தி, வலையமைப்பு வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 130 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் - மேலதிக நிதி | 98 |
| கல்வித் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 200 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் விருத்தி முகாமைத்துவக் கருத்திட்டம் | 84 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | 40 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சித் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 40 |

## 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டத் தலைப்பு | பெறுபேறு |
|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் பிராந்திய அபிவிருத்திக் கருத்திட்டம் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான வர்த்தகச் சுற்றாடலைப் பலப்படுத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் வர்த்தக அலை வரிசைகளின் ஊடாக நிதி வதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகு வழிகளை விருத்தி செய்வதன் மூலம் முதலீட்டின் வினை வேகத்தினை மாற்றியமைத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான சேவைகளை வினைத் திறனான முறையிலும் மற்றும் பயனுறு விளைவு உள்ள விதத்திலும் விநியோகிப்பதற்கு இலங்கையின் வர்த்தக அபிவிருத்திச் சேவைகள் துறையின் இயலளவை விருத்தி செய்தல். |
| உள்ளூராட்சி மன்ற உட்கட்டமைப்பு விருத்திக் கருத்திட்டம் | விருத்தியுற்ற நகர முகாமைத்துவம், நிறுவனங்களின் திட்டமிடல் மற்றும் நிதி இயலளவு, விசேடமாக உள்ளூராட்சி மன்றங்கள், விருத்தியுற்ற நகர வாழ்வாதாரங்கள், நகர உட்கட்டமைப்பு நிரம்பலையும், பராமரிப்பு வேலைகளையும் நிர்வகிக்க அதிகரிக்கப்பட்ட அரச மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களின் இயலளவு, |
| தேசிய நெடுஞ்சாலைகள் துறைக் கருத்திட்டம் | விருத்தியுற்ற தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு மற்றும் பலப்படுத்தப்பட்ட வீதித்துறை நிறுவனங்கள் |

## 2012 இன் விசேட நிகழ்வுகள்

- மார்ச் 2012 – உப தலைவர், செல்வி லக்ஷ்மி வெங்கடாச்சலம், தனியார் துறைக்குப் பொறுப்பானவர்
- மே 2012 – பிலிப்பைன்சின் மெனிலாவில் இடம் பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 45 ஆவது வருடாந்தக் கூட்டம் கடன் கைச்சாத்திடல்:
- ஜூன் 2012 – பணிப்பாளர் நாயகம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென் ஆசியத் திணைக்களம், திரு ஜுவான் மிராண்டா அவர்கள் உயர் மட்ட ஆலோசனைக் குறிப்பணிகளுக்காக வருகை தந்திருந்தார்
- செப்தெம்பர் 2012 - உப தலைவர், திரு.´க்சியாலு சாஹோ, உயர் மட்ட ஆலோசனைக குறிப்பணிகளுக்காக வருகை தந்திருந்தார்.
- அக்டோபர் - 2012 ஆசிய அபிவிருத்தி வங்கி சபைக் கழுவின் வருகை
- நவம்பர் 2012
    - வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம்
- 2012 இல் 97 ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுக்கள் வருகை தந்தன.


# ஜப்பான் பிரிவு

அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும் ஜப்பானிய அரசாங்கத்தின் ஜப்பானிய உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவியினைத் திரட்டுவதே ஜப்பான் பிரிவின் பொறுப்பாகும்.

## துறை வாரியான கடன் தொகுதி ஆய்வு

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐ. அ. டொ. 2495.2 மில்லியன் பெறுமதியுடனான ஜப்பானிய அரசாங்கத்தினால் நிதி உதவி வழங்கப்பட்ட 29 கருத்திட்டங்களை ஜப்பானிய பிரிவின் தற்போதைய செயற்பாடுள்ள கடன் தொகுதி உள்ளடக்குவதோடு, துறைமுகம், சக்தியும், வலுவும், நீர் வழங்கல் மற்றும் வீதித் துறை போன்ற பிரதான துறைகளில் முதலிடுவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது. இம்மொத்தக் கடன் தொகுதியில், 26 கடன் கருத்திட்டங்கள் ஐ. அ. டொ. 2,482.7 மில்லியன் தொகையைக் கொண்டுள்ளதோடு, 03 நன்கொடைக் கருத்திட்டங்கள் சுமார் ஐ. அ. டொ. 12.5 மில்லியன்களைக் கொண்டுள்ளது.

துறைவாரியான கடன் தொகுதி (ஐ அ டொ மில்லியன்)




## 2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்

2012 ஆம் ஆண்டில் ஜப்பானிய அரசாங்கத்திடம் இருந்து சலுகை இடிப்படையிலான கடன்களின் ஊடாகவும் மற்றும் நன்கொடைகளின் ஊடாகவும் கிடைக்கப் பெற்ற மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ. அ. டொ. 521.3 மில்லியன்களாக இருந்தது. இம்மொத்தத் தொகையில்,2012 இல் கைச்சாத்திடப்பட்ட ஐ அ டொ 508.7 மில்லியன் தொகை பெறுமதியான மூன்று கடன்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 ஐ அ டொ 346 மில்லியன், ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் ஐ அ டொ 115.3 மில்லியன் மற்றும் அடிப்படை சமூக சேவை எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களின் விருத்தி ஐ அ டொ 47.4 மில்லியன், போன்றனவாகும். 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஜப்பானிய நன்கொடைகளின் அர்ப்பணிப்பு ஐ அ டொ 12.5 மில்லியன்களாகும். இது கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கான வழங்கலுக்கான ஜப்பானிய நன்கொடை உதவி ஐ அ டொ 3.7 மில்லியன், கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் புனர் நிர்மாணம் ஐ அ டொ 8.3 மில்லியன், மற்றும் களனிப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் சப்ரகமுவா பல்கலைக் கழகத்திற்கும் ஜப்பானிய மொழிக் கற்கை உபகரண விருத்திக்கான கருத்திட்டம், ஐ அ டொ 0.5 மில்லியன் ஆகியனவற்றை உள்ளடக்கியுள்ளன. இம்மொத்தத் தொகையில், உயர்ந்த அளவிலான அர்ப்பணிப்புக்கள், நாட்டின் அவசர அடிப்படை உட்கட்டமைப்புத் தேவைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக வீதி மற்றும் சக்தியும், வலுவும் துறைகளின் விரிவான ஒரு பரிமாணம் உள்ளடக்கப்பட்டுள்ளது

## 2012 ஆம் ஆண்டின் பகிர்வுகள்

2011ஆம் ஆண்டில் ஜப்பானிய நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்த பகிர்வுத் தொகை ஐ. அ. டொ. 395.8 மில்லியன்களாக இருந்ததோடு, கடந்த ஐந்தாண்டு கால சராசரி பகிர்வு மட்டமான ஐ அ டொ 339.2 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அடைவாக இருக்கின்றது. 2012 இன் மொத்தப் பகிர்வில், ஐ அ டொ 226.8 மில்லியன்கள் வீதிகளுக்கும் பாலங்களுக்கும், ஐ அ டொ 78.89 மில்லியன் சக்தியும் வலுவும் துறையின் அபிவிருத்திக்கு வழங்கப்பட்டிருந்தன. நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய துறைகளின் ஊடாகவும் அறிக்கையிடப்பட்ட பகிர்வுகள் முறையே ஐ அ டொ 47.25 மில்லியன்களாகும்.

2012 ஆம் ஆண்டில் ஜப்பானிய நன்கொடை உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வுத் தொகை ஐ. அ. டொ. 28.6 மில்லியன்களாக இருந்தது. இத்தொகை சுகாதாரத் துறையில் சுமார் 52 சதவீதத்தையும், வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலிருந்து சுமார் 36 சதவீதத்தையும், மனித வள அபிவிருத்தித் துறையிலிருந்து சுமார் 9 சதவீதத்தையும், ஊடகத் துறையிலிருந்து சுமார் 2 சதவீதத்தையும் நீர் துறையிலிருந்து சுமார் 1 சதவீதத்தையும் அறிக்கையிட்டது.

.

## 2012ஆம் ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

2012ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐ. அ. டொ. மில்லியன் கடன்கள் |
|---|---|
| **கடன்கள்** | |
| அவசர இயற்கை அனர்த்த புனர் வாழ்வுக் கருத்திட்டம் | 91.4 |
| பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் I & II) | 743.5 |
| வறுமை சார் பொருளாதாரத்தை முன்னோக்கிய சமுதாய விருத்திக் கருத்திட்டம் | 49.6 |
| மாகாண / கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (மத்திய, சப்ரகமுவா, மற்றும் கிழக்கு மாகாணங்கள்) | 142 |
| காலித் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் | 124 |
| உயர் கொத்மலை நீர் மின்சக்திக் கருத்திட்டம் (I & II) | 300 |
| வவுனியா கிளிசொச்சி பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் | 29.5 |
| நீர் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (I & II) | 190.8 |
| கொழும்பு நகர மின் விநியோக அபிவிருத்திக் கருத்திட்டம் | 45.5 |
| வறுமை சார் கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 38.1 |
| சுற்றுலா வளங்களின் விருத்திக் கருத்திட்டம் | 22.2 |
| தெற்கு நெடுஞ்சாலைகள் நிர்மாணக் கருத்திட்டம் (II) | 162.9 |
| வறுமை உழிப்பு நுண் நிதிக் கருத்திட்டம் (PAMP II) | 23.9 |
| சக்தி பன்முகவாக்கல் விரிவாக்கக் கருத்திட்டம் (பொறியியல் சேவைகள்) | 7.6 |
| கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம் | 53 |
| ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் | 115.3 |
| எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்தி | 47.4 |
| சிறிய மற்றும் நுண் கைத்தொழில்கள் தலைவர் மற்றும் தொழில்முயற்சிகளின் விருத்திக் கருத்திட்டம் III | 93 |
| சுற்றாடல் ரீதியாக நட்புறவான தீர்வு நிதி II | 50.6 |
| **நன்கொடைகள்** | |
| கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனர் நிர்மாணம் | 8.3 |
| களனிப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் சப்ரகமுவா பல்கலைக் கழகத்திற்கும் ஜப்பானிய மொழிக் கற்கை உபகரண விருத்திக்கான கருத்திட்டம் | 0.5 |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் வழங்கல் | 3.7 |

## கிளிநொச்சி நீர் வழங்கல் புனருத்தாரண கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் நோக்கம் நெருக்கடியான காலப்பிரிவில் பயங்கரவாதிகளினால் சேதமடைந்த கிளிநொச்சியில் உள்ள நீர் வழங்கல் திட்டத்தைப் புனர் நிர்மாணம் செய்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மறுமலர்ச்சி அடையச் செய்வதன் ஊடாக அப்பிரதேசத்தில் நீர் சுத்தப்படுத்தும் வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் மக்களின் சுகாதார நிலைமைகளை உயர்வடையச் செய்தலும், மற்றும் நீரினால் ஏற்படக் கூடிய நோய்களைக் குறைத்தலுமாகும். கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் புனர் நிர்மாணம் 2012ஆம் ஆண்டில் ஐ அ டொ 8.3 மில்லியன் ஜப்பானிய நன்கொடை உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தகம், தொழில்சார் பயிற்சி நிலையங்கள் தனியார் நிறுவனங்கள், மத ஸ்தானங்கள், மற்றும் நெருக்கடியின் முடிவுக்குப் பின்னர் தோற்றம் பெற்றுள்ள கைத்தொழில்கள் போன்றன உட்பட நிறுவனங்களின் நிர்மாணங்களுக்கு அவசியமான வீட்டுத் தேவைகளுக்கல்லாத நீரிற்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கும் இக்கருத்திட்டம் உதவி புரியும். இக்கருத்திட்டம் 2020ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்பட்ட நீரின் தேவையைப் பூர்த்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதன் பிரகாரம், நீரைச் சுத்தப்படுத்தும் புதிய நீர் உள்ளீர்ப்பு ஒன்றும், அவ்வுள்ளீர்ப்பிலிருந்தான நீர் பரிமாற்ற வரிசை ஒன்றும், நீர் விநியோகிக்கும் நிலையம் ஒன்றும், முறையே 1000 மீ$^3$ மற்றும் 450 மீ$^3$ இயலளவைக் கொண்ட கிளிசொச்சி மற்றும் பரந்தன் நீர்க்கோபுரங்களையும் நிர்மாணிக்க இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கிளிநொச்சி மாவட்டத்தின் 14 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 20,000 மக்களுக்கும் அதிகமானோர் நன்மையை அடையக் கூடிய வகையில் 1500இற்கும் அதிகமான வீடுகளை இணைத்து பரந்தன் மற்றும் இரணைமடு சந்திக்கு நீரை விநியோகிப்பதற்காக 42 கி மீ உள்ளடங்கலான விநியோகக் குழாய் வரிசை ஒன்றை நிர்மாணித்தல்.

## விருத்தியுற்று வரும் பிரதேசங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்திக்கான கருத்திட்டம்

பின்வரும் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக ஐ அ டொ 47.4 மில்லியன் நிதி உதவியுடன் 2012இல் இலங்கை அரசாங்கத்தினால் இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

- அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்கல்

அரசாங்கத்தின் மருந்துத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வருடாந்தம் 4000 மில்லியன் வில்லைகளாக உற்பத்தியை விருத்தி செய்வதற்கு உயர்ந்த இயலளவைக் கொண்ட 4 புதிய தயாரிப்பு இயந்திரங்களைப் பொருத்துவதற்கும் மற்றும் அதனுடன் ஏனைய ஆதரவளிக்கும் செயன்முறை இயந்திரங்களைப் பொருத்துவதற்கும் அரச மருத்துவக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்கும் கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

- இரண்டாந்தர வைத்தியசாலைகளைப் பலப்படுத்தலும் மற்றும் நவீன தரமான பராமரிப்பு சேவைகளை வழங்குதலும்

மூன்றாந் தர மருத்துவ நிறுவனங்களின் சன நெருக்கடியைக் குறைப்பதற்கும், உள்ளூர் சமூகத்தில் பல்வேறு நோய்களினால் மரணத்துக்கு உள்ளாகும் நிலைமையினைக் குறைப்பதற்கும், இப்பிரதேசங்களில் பிரதான வைத்தியசாலைகளாக தேவையான வசதிகளுடன் மத்திய, சப்ரகமுவா, வட மேல், மற்றும் கிழக்கு மாகாணங்களில் நான்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டாந்தர வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படும். மேலும், மத்திய, சப்ரகமுவா, வட மேல், வட மத்திய , ஊவா, மற்றும் கிழக்கு மற்றும் வட மாகாணங்களின் வைத்தியசாலைகளுக்கு 124 உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட நோயாளர் காவு வண்டிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டம் 10 வருட தயவுக் காலப்பிரிவு உட்பட 40 வருட மீளச் செலுத்தற் காலப்பிரிவுக்கு முன்னர் முதலீட்டுச் செலவுகளை திரும்பப் பெறுவதற்கு நாட்டில் போதிய பொருளாதார நன்மைகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வவுனியா – கிளிநொச்சி பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் II

இக்கருத்திட்டத்தின் பூரண நோக்கம் வட மாகாணத்தில் உள்ள குடும்பங்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்கள் மற்றும் அரச சேவைகள் போன்றனவற்றிற்கு நன்மை அளிப்பதற்காக சக்தி முறைமையின் பரிமாற்ற இயலளவை விருத்தி செய்வதாகும்.

வட மாகாணத்தில் உள்ள நுகர்வோருக்கு நம்பத்தகுந்த போதிய வினைத்திறனான மின்சார வழங்கலை உறுதிப்படுத்தும் நோக்குடன் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை 132 கிவோ பரிமாற்ற வரிசையினை மீள இணைப்பதன் மூலமும் மற்றும் கிளிநொச்சியில் மின் கட்ட உப நிலையத்தினை நிர்மாணிப்பதன் மூலமும் பயங்கரவாதிகளினால் சேதமடைந்த வட மாகாணத்தின் பரிமாற்ற வலையமைப்பினை வலிமைப்படுத்துவதையும், அதனூடாக அப்பிரதேசங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைச் சூழலை விருத்தி செய்வதன் ஊடாகவும் மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகவும் வட மாகாணத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதையே இக்கருத்திட்டம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்கருத்திட்டத்துக்காக ஐ அ டொ 15.2 மில்லியன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இக்கடனானது 10 வருட தயவுக் காலப்பிரிவு உட்பட 40 வருட மீளச் செலுத்தும் காலப்பிரிவுடனான சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்துடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது சக்தியும் வலுவும் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. வவுனியா – கிளிநொச்சி சக்திப் பரிமாற்ற வரிசை "உதுறு வசந்தய" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 செப்தெம்பர் மாதம் 25ஆம் திகதி இடம் பெற்ற விழாவின் போது மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை வேலைச் சட்டகத்திற்கு ஏற்ப, 2012/ 2013 நிதி ஆண்டிற்கான 43 ஆம் யென் கடன் பொதியின் கீழ் நிதி அளிப்பதற்கு உயர் முன்னுரிமையுடனான நான்கு கருத்திட்டங்கள் அரசாங்கத்தினால் உள்ளடக்கப்பட்டன. இது தலைநகரில் மின்சாரத்திற்கான அதிகரித்து வரும் கேள்வியை பூர்த்தி செய்வதற்கான பாரிய கொழும்பு பரிமாற்ற மற்றும் விநியோகக் கருத்திட்டம், தேசிய வீதிகள் மற்றும் நாடு பூராவும் உள்ள வீதி வலையமைப்பில் 37 பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் இணைப்பை விருத்தி செய்தல், எதிர்பாராத அனர்த்தங்களின் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளுக்கும் மற்றும் மனித உயிர்களுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கான மண் சரிவு அனர்த்தப் பாதுகாப்பு கருத்திட்டம், அனுராதபுரத்தின் வட பகுதியில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான அனுராதபுர வடக்கு நீர் விநியோகக் கருத்திட்டம் போன்றனவற்றை உள்ளடக்கியுள்ளது. அரசாங்கத்தின் மாபெரும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் சக்திக்கு ஏற்ப, வருடாந்த யென் கடன் பொதியின் பெறுமதி 2012ஆம் ஆண்டில் கடந்த மட்டங்களான ஐ அ டொ 350 – 400 மில்லியன்களிலிருந்து ஐ அ டொ 500 மில்லியன்களாக உயர்வடைந்துள்ளது.

## கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் வழங்கலுக்கான ஜப்பானிய நன்கொடை உதவி

ஆயுள் எதிர்பார்க்கையை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்தல் போன்ற விரிவான நோக்கங்களுடன் இலங்கை அரசாங்கம் எப்போதும் உள்ளூர் மக்களின் சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்தி வந்துள்ளது. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செலுத்தும் நோக்கத்திற்காக ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தொழில் உபகரணங்களின் பெறுகை நடவடிக்கைகளுக்காக கருத்திட்டமல்லாத நன்கொடை உதவியின் கீழ் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து ஐ அ டொ 3.7 மில்லியன் நன்கொடைகளைப் பெற்றுக் கொணடுள்ளது. இந்நன்கொடை உதவியானது சுகாதார அமைச்சின் இணக்கப்பாட்டுடன் சுகாதாரத் துறைக்கான விசேடமாக குருநாகலை போதனா வைத்தியசாலை, சிறுவர்களுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலை, அம்பாறை பொது வைத்தியசாலை, பதுளை பொது வைத்தியசாலை, இரத்தினபுரி பொது வைத்தியசாலை, போன்றவற்றிற்கான மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும், சுகாதார அமைச்சும் மற்றும் மாகாண சபைகளும் நடைமுறையிலுள்ள அவற்றினது குணப்படுத்தக் கூடிய பராமரிப்புச் சேவைகளை விருத்தி செய்வதற்கும், மற்றும் மக்களுக்கு நவீன தரம் வாய்ந்த பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கும், இந்நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் போதனா வைத்தியசாலைகளுக்கும் மற்றும் மருத்துவ ஆய்வு நிறுவனங்களுக்கும் தன்னியக்க மருத்துவ இரசாயனவியல் ஆய்வு உபகரணங்கள், கணணிமயபப்படுத்தப்பட்ட கதிர்வீச்சு ஒளிப்பட வரைவி, எடுத்துச் செல்லக் கூடிய நேர்களைக் கண்டறியக் கூடிய கேளா ஒலி முறைமைகள், மற்றும் அதி அழுத்த கொதி உபகரணங்கள் போன்ற உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஹபரணை - வேயன்கொட மின் பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம்

அரசாங்கம் நிலையான நம்பகமான மின் வழங்கல் முறையினையும் அதே நேரத்தில் மின் இணைப்பில் ஏற்படும் இழப்பினையும் குறைத்துக் கொள்வதற்காக ஹபரண - வேயன்கொட இடையில் 220 கிவோ மின்கடத்தும் முறையினை அமைப்பதற்கு ஐ.அடொ. 115 மில்லியன் செலவு செய்வதன் மூலம் மின் உற்பத்தி செய்யும் போது வெளிப்படுத்தப்படும் காபனீரொக்சைட் அளவும் குறைவாகவே உள்ளது. அதற்கிணங்க மூலதனச் செலவான ஐ.அடொ. 115 மில்லியன் 40 வருட கடன் மீளச் செலுத்தும் கால எல்லைக்குள் அமையும். இக்கருத்திட்டம் 2016 செப்தெம்பரில் ஆரம்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலும் இக்கருத்திட்டமானது நாட்டின் மின் தேவையை நிவர்த்தி செய்வதுடன் மேலும் இத்திட்டத் தேவையான மின்சக்தியினை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்வதுடன் சம்பந்தப்பட்ட வர்த்தக சமூகத்தினர் தங்களின் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தப்பட்ட இலாபகரமான முறையில் செயற்படுத்துவதற்கு அனுகூலமாக அமையும். மேலும் ஜப்பான் கிளிநொச்சியில் உபமின் நிலையம் அமைப்பதற்கும் உதவி வழங்குகின்றது. எனவே மின்வழங்கும் வலையமைப்புத் திட்டத்தில் தொடர்ச்சியான திருத்தங்கள், பழமைவாய்ந்த பகுதிகளைப் புதுப்பித்தல், காலாவதியான முறைகளை மாற்றியமைத்தல், உரிய பாதுகாப்பு நடைமுறை என்பவற்றின் மூலம் திடமான, உயர்தர மின்சாரத்தினை வழங்க முடிகின்றது. கொழும்பு மாநகரில் உள்ள மின்வலையமைப்பினைத் திடம்படுத்தவும், புனரமைக்கவும், வாடிக்கையாளரின் அதிகரித்த மின்வழங்கலை உறுதிப்படுத்தவும், எதிர்கால வாடிக்கையாளருக்கு சூரியசக்தி மூலமான மின்சாரத்தினை வழங்கவும் மாற்று வழிமுறை அதிகம் செலவானதாகக் கருதப்படுகின்றது.

## 2012ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள்

### யென் கடன் பொதி

இலங்கை அரசாங்கத்துக்கும், ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துக்கும் இடையில் நடாத்தப்பட்ட ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் 43 ஆம் யென் கடன் பொதியின் கீழ் நிதியளிப்புக்காக முடிவு செய்யப்பட்டது.

- பாரிய கொழும்புப் பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக் குறைப்புக் கருத்திட்டம்
- தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணக் கருத்திட்டம்
- தேசிய வீதி வலையமைப்பின் மண் சரிவின் அனர்த்தப் பாதுகாப்புக் கருத்திட்டம்
- அனுராதபுரம் வடக்கு ஒன்றிணைக்கப்பட்ட நீர்க் கருத்திட்டம்

இக்கருத்திட்டங்கள், இலங்கையின் உயர் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கத்துடன் இனங்காணப்பட்டது. இக்கருத்திட்டங்களுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட அர்ப்பணிப்புக்கள் சுமார் ஐ அ டொ 428.9 மில்லியன்களாகும்.

### வருடாந்த நன்கொடை உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினதும், மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்களினதும் ஆலோசனையுடன், ஜப்பான் பிரிவு, ஜப்பானிய பொது நன்கொடை உதவி, 2012/2013 ஆம் நிதி ஆண்டிற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு, மற்றும் அபிவிருத்தி கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் பெற்றுக் கொள்வதற்காக ஜப்பானிய தூதரகத்துக்கு 20 கருத்திட்டப் பிரேரணைகளுக்கான உத்தியோகபூர்வ வேண்டுகோளை சமர்ப்பித்தது.

## 2012 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்

### தூதுவர் குழுக்கள்

ஜப்பான் பிரிவு தொடர்புடைய அமைச்சுக்களின் சிபாரிசுடன் 2012 ஆம் ஆண்டில் 100 தூதுவர் குழுக்களை பிரகடனப்படுத்தியதோடு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தூதுவர் குழுக்களில், அநேகமானவை, மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவு அளிக்கும் தூதுவர் குழுக்களாக இருந்ததோடு, அவர்கள் கருத்திட்டங்களை இலகுவாகவும் சுமுகமாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவினை வழங்கியிருந்தன. மேலும், அத்தூதுவர் குழுக்கள் தற்போதைய கடன் தொகுதியின் செயலாற்றத்தினை மீளாய்வு செய்ததன் பின்னர் எதிர்கால கருத்திட்டங்களையும் முடிவு செய்தன.

### வவுனியா – கிளிநொச்சி சக்திப் பரிமாற்ற வரிசையின் திறப்பு விழா

வவுனியா – கிளிநொச்சி சக்திப் பரிமாற்ற வரிசை : “வடக்கின் வசந்தம்” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் 2012 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி இடம் பெற்ற விழாவில் மாண்பு மிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜப்பானிய பிரதி முதலமைச்சரின் வருகை


ஜப்பானிய பிரதி முதலமைச்சரான திரு கட்சுயா ஒக்காடா அவர்கள் இலங்கையுடனுள்ள உறவினை விருத்தி செய்வதற்கும் மற்றும் அக்கராயன் குளம் வாவி அபிவிருத்திக் கருத்திட்டத்தினைக் கண்காணிப்பதில் பங்கேற்பதற்கும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வருகை தந்தார்.

# உலக வங்கிப் பிரிவு

இப்பிரிவு அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கியிடமிருந்து அபிவிருத்தி உதவியினை திரட்டுவதற்குப் பொறுப்பாக உள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளின் பிரகாரம், உலக வங்கியின் 2009 – 2012 ஆம் ஆண்டுகளுக்கான உதவி உபாயம், உட்கட்டமைப்பு, மனித வளங்கள், மற்றும் பிராந்திய அபிவிருத்தித் துறைகளுக்கு சலுகை அடிப்படையிலான நியதிகளில் ஐக்கிய அமெரிக்க டொலர் 900 மில்லியன்களை ஒதுக்கியுள்ளது. மேலும், இலங்கை நடுத்தர வருமான நாடொன்றின் நிலைமைக்கு மாற்றப்பட்டமையானது, 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு, புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து கலப்பு நிதிப் பெறுகைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்களைத் திறந்து விட்டுள்ளது.

**அர்ப்பணிப்புகளும், பகிர்வுகளும் - 2007 - 2012 (ஐ அ டொ. மில்லியன்)**



## அர்ப்பணிப்புக்கள்

இலங்கை 2007 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் ஐ அ டொ 1135.3 மில்லியன் கடன்களையும், ஐ அ டொ 37.8 மில்லியன் நன்கொடைகளையும் உலக வங்கியிடமிருந்து திரட்டியுள்ளது. 2007 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் 36 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, அவற்றில் 2012ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட 7 உடன்படிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன

**2012ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்**

| கருத்திட்டத்தின் பெயர் | கடன்/ நன்கொடை | தொகை ஐ. அ. டொ. மில்லியன |
|---|---|---|
| கொழும்பு மாநகர அபிவிருத்தி | கடன் | 213.0 |
| அறிவுக் கேந்திரக் கருத்திட்டத்தின் அடித்தளமொன்றாக பாடசாலைக் கல்வி முறைமையினை மாற்றியமைத்தல் | கடன் | 100.0 |
| இ - இலங்கை அபிவிருத்தி (மேலதிக நிதியீட்டம்) | கடன் | 11.0 |
| களஞ்சிய ஏற்பு நிதியீட்டக் கருத்திட்டம் | நன்கொடை | 6.5 |
| காசு மாற்றல்கள் மற்றும் பயிற்சியின் ஊடாக வலது குறைந்த மக்களுக்கு உதவும் ‘‘திரிசவிய’’ நிகழ்ச்சித் திட்டம் | நன்கொடை | 2.59 |
| கொழும்பு மாநகர அபிவிருத்தி | நன்கொடை | 0.9 |
| இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்; (ICASL) | நன்கொடை | 0.5 |

2009 – 2012ஆம் ஆண்டு காலப்பிரிவிற்காக உலக வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 900 மில்லியன்களைக் கொண்ட மொத்த வளங்களின் உள்ளடக்கத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் 324 மில்லியன்கள் 2012 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு காலப்பிரிவில் 24 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஐ அ டொ 1043.9 மில்லியன் முதலீட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, கணிசமான அளவிலான முதலீடுகள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தினை உள்ளடக்கியதாக பிராந்திய அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டது.


நடுத்தர வருமானம் கொண்ட நாடொன்றாக உருவாவதற்கான அரசாங்கத்தின் விருப்பத்தினை அடைவதற்கு போட்டித் தன்மை கொண்டதும் சக்தி வாய்ந்ததுமான நகரங்களை உருவாக்குவதற்கான தேவைகளை இனங்கண்டதன் விளைவாக, அரசாங்கம் கொழும்பு மாநகர அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு உலக வங்கியின் புனர் நிர்மாண அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து ஐ அ டொ 213 மில்லியன்களை பெற்றுக் கொண்டது. இக்கருத்திட்டத்திற்கு 2012 ஆம் அண்டு ஏப்ரில் மாதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை இலங்கை அரசாங்கமும் ஒன்றிணைந்து நிதி வழங்கி வருகின்றது. மேலும், 2012 – 2016 வரையிலான காலப்பிரிவிற்கான ‘‘கல்வித் துறை அபிவிருத்திக்கான வேலைச்சட்டக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறிவுக் கேந்திரத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையினை மாற்றியமைத்தல்: கருத்திட்டத்துக்காக ஐ அ டொ 100 மில்லியன்களை பெற்றுக் கொண்டது. மேலும், இ-ஆட்சி நடவடிக்கைகளின் தற்போதைய இயங்கு விசையினைப் பராமரிப்பதற்கு 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் இ - இலங்கை கருத்திட்டத்துக்கு மேலதிக நிதியீட்டத்தினைப் பெற்றுக் கொள்வதற்கும் அரசாங்கத்தினால் முடிந்தது. இக்கருத்திட்டம் வளர்ச்சியினை சமமான அடைவையும், மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் தனியார் துறையின் விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின்போட்டித் தன்மையை ஊக்குவசிக்கம் அதே வேளை, இ வர்த்தகத்திற்கான நிகழ்நிலையிலான அரச சேவை வசதிகளுடனான தகவல்களையும், மற்றும் தொடர்பாடல்களையும் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

உலக வங்கியினால் வழங்கப்பட்ட நன்கொடையானது பிரதானமாக ஊனமுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்வதற்கான பண உதவி மற்றும் பயிற்சி போன்றவற்றை மையமாகக் கொண்டு ‘‘ திரிசவிய’’ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

## 2012 இன் அர்ப்பணிப்புகள்

2007 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நிதிப் பகிர்வுகள் 23 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, உயர்ந்த அளவிலான பகிர்வான ஐ அ டொ 217.21 மில்லியன் 2011 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியில் 2012 ஆம் ஆண்டினது குறைவான பகிர்வானது பிராந்திய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பெறுகை மற்றும் செயன்முறைத் தாமதங்களும் மற்றும் அரச துறை இயலளவுக் கட்டமைப்புக் கருத்திட்டத்தின் புள்ளிவிபரச் சேர்க்கையின் பலவீனமான செயலாற்றுகைக்கு காரணமாக அமைந்தது.

ஆயினும், பிராந்திய அபிவிருத்தித் துறை தொடர்பான பகிர்வானது 2012ஆம் ஆண்டு காலப்பிரிவில் உயர்வாக இருந்ததோடு, அதனைத் தொடர்ந்து இரண்டாவது உயர்வான பகிர்வை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை அறிக்கையிட்டுள்ளது. கணிசமான அளவிலான தொகையானது அதாவது ஐ அ டொ 16 மில்லியன் கல்வித் துறைக்கே பகிரப்பட்டுள்ளது.




2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில், மேலும் அரச செலவீனத்தின் வினைத் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் தனிப்பட்ட கருத்திட்டங்களை மையமாகக் கொள்வதை விட நிகழ்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட நிதியீட்டத்தினை ஏற்றுக் கொள்வதற்கு உலக வங்கியினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உதாரணம், "அறிவுக் கேந்திரத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையினை மாற்றியமைப்பதற்கான கருத்திட்டத்திற்கான நிதியீட்டம் நிகழ்ச்சித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட நிதியீட்டமாக அமைந்துள்ளதோடு, இரண்டாவது சுகாதாரத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதிப்படுத்துவதற்காக உலக வங்கியிடமிருந்து கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகளும், உலக வங்கியின் தூதுவர் குழுக்களும்

- இலங்கைக்கான உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரின் வருகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- 91 தூதுவர் குழுக்களுக்களுக்கும் மற்றும் 160 இற்கும் அதிகமான தூதுவர் குழுக்களுக்கும் மற்றும் உலக வங்கியின் பணியாளர்களுக்குமான வீசாக்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

# மத்திய கிழக்கும் சார்க் பிரிவும்

## மத்திய கிழக்கு பிராந்தியம்


திணைக்களத்தின் மத்திய கிழக்குப் பிரிவின் ஊடாக திரட்டப்படுகின்றது. மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்காளர்களான ஈரான், குவைட், சவூதி அரேபியா, ஆகிய நாடுகளும், அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதி போன்ற நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்தான அபிவிருத்தி உதவி சலுகை அடிப்படையிலான கடன்கள் மற்றும் நன்கொடைகள் என்ற வடிவில் கிடைக்கப் பெற்றுள்ளன. மத்திய கிழக்குப் பிராந்தியம், சுகாதாரம், நீர்ப்பாசனம், மற்றும் கல்வி ஆகிய துறைகளை மையாகக் கொண்டு நீண்ட கால அபிவிருத்திப் பெறுபேறுகளை அடையும் அதே வேளை சக்தியும், வலுவும், வீதிகள், மற்றும் பாலங்கள் போன்ற பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துவதற்கு நீண்ட கால அபிவிருத்தி உதவியை தொடர்ந்து வழங்கிறது.

## 2012 இன் அர்ப்பணிப்புகள்

2012இல் மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 100 மில்லியன்களாகும். அத்தொகையில் ஐ அ டொ 60 மில்லியன்கள் சவூதி நிதியினாலும் மற்றும் எஞ்சிய ஐ அ டொ 40 மில்லியன்களும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியினாலும் நாட்டின் வீதி வலையமைப்பு அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இக்கடன் நிதியானது 208 கி மீ நீளமான 13 தேசிய வீதிகளைப் மற்றும் புனர் நிர்மாணம் செய்வதற்கும், மற்றும் பொல்கஹவலை – கேகாலை வீதியின் பாலத்தையும் புனர் நிர்மாணம் செய்வதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது. இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவதன் மூலம் வீதி இணைப்பினை விருத்தி செய்தல், சீரான போக்குவரத்துப் பாய்ச்சலை உறுதிப்படுத்தல், போக்குவரத்துத் தாமதங்களை தவிர்த்தல், விசேடமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மிக இன்றியமையாததாக விளங்கும் உயர்வான போக்குவரத்து நடை பாதைகளில் நேரத்தை வீணடிப்பதனை தடுத்தல், போன்றனவற்றிற்கு வழிவகுக்கும்.

## அர்ப்பணிப்புக்கள் 2007-2012




2007 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அபிவிருத்திப் பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 760 மில்லியன்களாக இருந்தது. மொத்த அர்ப்பணிப்புக்களில் ஐ அ டொ 532 மில்லியன் நாட்டின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மேலும், 2007 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் முறையே ஐ அ டொ 108 மில்லியன், ஐ அ டொ 88.7 மில்லியன், ஐ அ டொ 20 மில்லியன், மற்றும் ஐ அ டொ 17.5 மில்லியன் போன்றன வீதித் துறை, சக்தியும், வலுவும், சுகாதாரம் உயர் கல்வி ஆகிய துறைகளுக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

## 2012ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கருத்திட்டங்கள்

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐ. அ. டொ மில்லியன் | உப தொகை ஐ. அ. டொ மில்லியன் |
|---|---|---|---|
| ஈரான் | உமா ஓயா நீர் மின்சார மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டம் | 450.00 | ***538.75*** |
| | கிராமிய மின்சாரமயமாக்கல் கருத்திட்டம் | 88.75 | |
| சவூதி நிதி | காக்கை வலி தொடர்பான மருத்துவ நிலையங்களின் ற்றும் சுகாதார நிலையங்கள் கருத்திட்டம் | 20.00 | ***166.00*** |
| | களு கங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 46.00 | |
| | வீதி வலையமைப்புக் அபிவிருத்திக் கருத்திட்டம் | 60.00 | |


| | | | |
|---|---|---|---|
| **குவைட்** | பாலங்களின் புனர் நிர்மாணமும் மற்றும் , புனருத்தாரணமும் | 16.58 | ***84.93*** |
| | சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்றாந்தரக் கல்வி மற்றும் நிர்வாக உட்கட்டமைப்பையும் பலப்படுத்தல் | 20.00 | |
| | மொறகொல்லை நீர் மின்சார கருத்திட்டம் – சாத்திய வள ஆய்வு | 0.85 | |
| | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி1-அ | 10.5 | |
| | களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 37.00 | |
| **சுஅவெநி (OFID)** | தேசிய நெடுஞ்சாலைகள் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 8.00 | ***64.00*** |
| | களு கங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 16.00 | |
| | வீதி வலையமைப்புக் அபிவிருத்திக் கருத்திட்டம் | 40.00 | |
| | **மொத்தம்** | | **853.68** |

## 2012 இல் பகிர்வுகள்

கடந்த ஐந்தாண்டு காலப்பிரிவில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான மொத்தப் பகிர்வுகள் ஐ அ டொ 143.65 மில்லியன்களாகும். இத்தொகையில் 2012 இன் பகிர்வுகள் ஐ அ டொ 56.36 மில்லியன்களாக இருந்ததோடு, அது 2007 இல் மேற்கொள்ளப்பட்ட பகிர்வான ஐ அ டொ 12.9 மில்லியனை விட 300 சதவீதத்தை விட அதிகமாக இருந்தது. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட உயர்வான பகிர்வு பிரதானமாக உமா ஓயா பல நோக்குக் கருத்திட்டத்திற்கும் மற்றும் கிராமிய மின்சார மயமாக்கல் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்விரண்டு கருத்திட்டங்களும் ஒன்றிணைந்து ஐ அ டொ 48.4 மில்லியன்களை அறிக்கையிட்டது.

## பகிர்வுகள் 2007 - 2012

பகிர்வுகள் 2007 – 2012 (ஐ அ டொ மில்லியன்)



## 2012 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

அராபிய அபிவிருத்திக்கான குவைட் நிதியினால் நிதி உதவி வழங்கப்பட்ட இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதலாம் கட்டம் 2012 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

## 2012 ஆம் ஆண்டில் நிகழ்ந்த விசேட நிகழ்வுகள்

- நிதி அமைச்சரும், அபிவிருத்திக்கான சவூதி நிதியின் தலைவருமான மேன்மை தங்கிய கலாநிதி இப்ராஹீம் அப்துல் அஸீஸ் அல் அஸ்ஸாப் அவர்கள் வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கடன் உடன்படிக்கையினைக் கைச்சாத்திடுவதற்காக அக்டோபர் மாதம் 27 – 30 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

- சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியின் பணிப்பாளர் நாயகமான திரு. சுலைமான் ஜே அல்- ஆபீஷ் அவர்கள் வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கடன் உடன்படிக்கையினைக் கைச்சாத்திடுவதற்காக அக்டோபர் மாதம் 7 – 9 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

## 2013 இல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கருத்திட்டங்கள்

பின்வரும் கருத்திட்டங்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்து வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதற்கு 2012 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

| கருத்திட்டம் | அபிவிருத்திப் பங்காளர் | தொகை (ஐ அ டொ மில்லியன்) |
|---|---|---|
| தேசிய வீதி வலையமைப்பின் புனர் நிர்மாணமும் புனருத்தாரணமும் | அஅகுநி | 36 |
| கொழும்புத் தேசிய நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் | சஅவெநி | 50 |
| மேல் மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | சஅவெநி | 17 |

## சார்க் நாடுகள்

### இந்தியா

இலங்கை அரசாங்கம் இந்தியாவிடமிருந்து கடன்கள் மற்றும் நன்கொடைகள் ஆகிய வடிவங்களில் உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவியினை பெற்றுக் கொள்கின்றது. கடன் வரிசையானது, இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி (எக்சிம்) வங்கியின் ஊடாக வழங்கப்படும் அதே வேளை, நன்கொடை உதவி, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது


## 2012 இன் அர்ப்பணிப்புக்கள்

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஆர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 1,448 மில்லியன்களாகும். கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில். உயர்ந்த அளவிலான அர்ப்பணிப்புக்கள் 2012 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது ஐ அ டொ 700.4 மில்லியன்களாக இருந்ததோடு, 2008 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மேற்கொள்ளப்ட்ட மொத்த அர்ப்பணிப்பில் 48 சதவீதத்தினை அறிக்கையிட்டது. அத்தொகையில் ஐ அ டொ 257.28 மில்லியன்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 49,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நன்கொடை உதவியாகவே வழங்கப்பட்டிருந்தது. இந்தியா ஐ அ டொ 382.37 மில்லியன்களைக் இந்திய எக்சிம் வங்கியின் ஊடாக கடனாக வழங்கியிருந்தது. அத்தொகையில் ஐ அ டொ 60.39 மில்லியன் வடக்குப் புகையிரத வீதிச் சேவைகளின் மறு சீரமைப்புக்கும் மற்றும் ஐ. அ. டொ 60.69 மில்லியன்கள் பாரிய தம்புள்ளை நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 இற்கும் பெற்றுக் கொள்ளப்பட்டது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல், மற்றும் சேதத்துக்கு உள்ளாகிய உட்கட்டமைப்புக்களை புனர் நிர்மாணம் செய்தல் உள்ளடங்கலாக மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனருத்தாரணம் செய்வது போன்ற பிரதான முன்னுரிமை பெற்ற துறைகளையே அவர்களின் நிதி உதவி மையமாகக் கொண்டிருந்தது.


## துறை வாரியான அர்ப்பணிப்புக்கள், 2008 - 2012

2008-2012 காலப்பகுதியில் இந்தியாவின் உயர்ந்த அளவிலான அர்ப்பணிப்பானது புகையிரத துறையின் அபிவிருத்திக்கே மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, இத்தொகை ஐ அ டொ. 966 மில்லியனாகவும் இருந்தது. இரண்டாவது பாரிய அர்ப்பணிப்பு ஐ அ டொ 288 மில்லியன்களுடன் வாழ்வாதார அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. ஐ அ டொ 60.7 மில்லியன் நிதி அர்ப்பணிப்பு நீர் விநியோக அபிவிருத்திக்கே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவின் மொத்தப் பகிர்வானது ஐ அ. டொ. 578.95 மில்லியன்களாக இருந்தது. இத்தொகையில் 2012 ஆம் ஆண்டின் மொத்தப் பகிர்வு ஐ அ டொ 294.93 மில்லியன்களாக இருந்தது. இத்தொகையில் உயர்ந்த அளவிலான பெறுமதியான ஐ அ டொ 91.8 மில்லியன்கள் வட மாகாணத்தின் புகையிரத வீதிகளை புனர் நிர்மாணம் கெய்வதற்கே பகிரப்பட்டிருந்தது.




## இந்தியாவின் அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும் - 2008 – 2012 (ஐ அ டொ மில்லியன்)



## 2012 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

ஐ அ டொ 167.4 மில்லியன்களை சலுகை அடிப்படையிலான கடன் வரிசையாகப் பெற்றுக் கொண்ட தெற்குப் புகையிரத வீதிக் கருத்திட்டம் 2012இல் பூர்த்தி செய்யப்பட்டது.

| புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் | திகதியும் இடமும் | நிரல் அமைச்சு / நிறுவனம் |
|---|---|---|
| விவசாயத் துறையின் ஒருங்கிணைப்பு தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஜனவரி மாதம் 17ஆம் திகதி 2012, கொழும்பு | விவவசாய அமைச்சு |
| இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 49,000 வீடமைப்பு அலகுகளுக்கான இந்திய நன்கொடை உதவியை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஜனவரி மாதம் 17ஆம் திகதி 2012, கொழும்பு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவுக்கும் மற்றும் இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு அதிகார சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஜனவரி மாதம் 17ஆம் திகதி 2012, கொழும்பு | தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு |
| உள்ளூர் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மத சார்பான நம்பிக்கைகளும், கல்வி மற்றும் தொழில்சார் நிறுவனங்களின் ஊடாக சிறிய அபிவிருத்திக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய நன்கொடை உதவி தொடர்பான இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஜுன் மாதம் 09ஆம் திகதி 2012, புது டில்லி | |
| இந்திய - இலங்கை மின்சாரக் கட்டமைப்பின் உள்ளக இணைப்பிற்கான சாத்திய வள ஆய்வு தொடர்பான இந்திய சக்தி வலையமைப்பு ஒருங்கிணைப்புக் கம்பனிக்கும் , இலங்கை மின்சார சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஜுன் மாதம் 09ஆம் திகதி 2012, புது டில்லி | சக்தியும் வலுவும் அமைச்சு |
| தீர்ப்பளிக்கப்பட்ட மக்களை மாற்றுவது தொடர்பான இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உடன்படிக்கைகளும் | ஜுன் மாதம் 09ஆம் திகதி 2012, புது டில்லி | புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சும் நீதி அமைச்சும் |

# இரு பக்க கிழக்குப் பிரிவு


## சீனா

இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து நன்கொடை மற்றும் கடன் ஆகிய வடிவங்களில் நிதி உதவியினைப் பெற்றுக் கொள்கின்றது. சீன அரசாங்கத்தினால் நன்கொடைகளும், வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்படும் அதே வேளை, கடன்களை சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி, சீன அபிவிருத்தி வங்கி, மற்றும் சீன கைத்தொழில் வர்த்தக வங்கி ஆகியன வழங்குகின்றன.

2008 – 2012ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து ஆண்டு காலப்பிரிவில் சீனாவினால் மேற்கொள்ளப் பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 3,609 மில்லியன்களாகும். கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில் உயர் நிலையிலான அர்ப்பணிப்புக்கள் அதாவது ஐ அ டொ 1,206 மில்லியன்கள் 2009 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து முறையே 2012 ஆம் ஆண்டில் ஐ அ டொ 1,056 மில்லியன்களையும், மற்றும் 2010 ஆம் ஆண்டில் ஐ அ டொ 829 மில்லியன்களையும் அறிக்கையிட்டது. சீன எக்சிம் வங்கி 2012 இல் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II மற்றும் இலங்கை கிழக்கு மாகாண மின்னொளியூட்டல் கருத்திட்டத்துக்குத் தேவையான நிதியை அர்ப்பணித்த அதே வேளை, சீன அபிவிருத்தி வங்கி மொறகஹகந்தை அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான நிதியை அர்ப்பணித்தது.

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் சீனாவிலிருந்து கிடைக்கப் பெற்ற மொத்தப் பகிர்வுகள் ஐ அ டொ 2,514 மில்லியன்களாகும். அத்தொகையில் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வு ஐ. அ. டொ. 868.19 மில்லியன்களாகும். அத்தொகையில் உயர் நிலையிலான பகிர்வான ஐ அ டொ 345 மில்லியன் மத்தளை சர்வதேச விமான நிலையக் கருத்திட்டத்துக்குப் பகிரப்பட்டிருந்தது. முறையே இலங்கை புகையிரத வீதிக் கருத்திட்டம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான பகிர்வுகள் முறையே ஐ அ டொ 177 மில்லியன்களும் ஐ அ டொ 162 மில்லியன்களும் பகிரப்பட்டிருந்தன.


சீனாவிலிருந்தான அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும் – 2008 - 2012 (ஐ அ டொ மில்லியன்)




### துறை வாரியான விநியோகம்

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில், சீன உதவியானது பிரதானமாக வீதிகளும் பாலங்களும், சக்தியும் வலுவும், துறைமுகங்கள், கப்பற் போக்குவரத்துத் துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளின் அபிவிருத்திக்கே பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது சீனாவின் மொத்த கடன் உதவித் தொகுதியானது ஐ அ டொ 3,876 மில்லியன்களாக உள்ளது. இத்தொகையில் உயர்ந்த அளவிலான தொகை வீதிகள் மற்றும் பாலங்கள் துறைகளின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. அது 2012 ஆம் ஆண்டில் சீனாவின் மொத்தக் கடன் உதவித் தொகுதியில் ஐ அ டொ 1,565 மில்லியன்கள் அல்லது 40 சதவீதமாக இருந்தது. 2012 ஆம் ஆண்டில் சீனாவின் மொத்தக் கடன் உதவித் தொகுதியில் அரசாங்கத்தினால் நிதி உதவி வழங்கப்பட்ட மொத்தக் கருத்திட்டத் தொகுதியின் இரண்டாவது உயர்வான தொகை சக்தியும் வலுவும் துறைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது இக்காலப்பிரிவில் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகுதியில் 31 சதவீதமாகும். துறைமுகங்களும், கப்பற் துறையும் சுமார் 23 சதவீதத்தினைப் பயன்படுத்தியுள்ளது.

கடன் தொகுதியின் விநியோகம் 2008 - 2012




### பின்வரும் கருத்திட்டங்கள் 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன

- இலங்கையின் கிழக்கு மாகாண மின்னொளியூட்டலுக்கான நிதி (கிழக்கு மாகாணம்)
- அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II

# கொரியா

கொரியா அரசாங்கம், நன்கொடைகள் மற்றும் கடன்கள் மூலம் இலங்கைக்கு அபிவிருத்தி உதவியினை வழங்குகின்றது. கொரியா அரசாங்கம், நன்கொடைகள் மற்றும் கடன்கள் மூலம் இலங்கைக்கு அபிவிருத்தி உதவியினை வழங்குகின்றது. நன்கொடை உதவி கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாகவும், மற்றும் கடன் உதவி கொரியா ஏற்றுமதி இறக்குமதி (எக்சிம்) வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் ஊடாகவும் வழங்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் கொரியாவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 19.9 மில்லியன்களாக இருந்ததோடு, 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வு ஐ. அ. டொ. 47.2 மில்லியன்களாகவும் இருந்தது. 2012ஆம் ஆண்டின் கொரிய நிதியீட்டமானது பிரதானமாக வீதி அபிவிருத்தி, நீர் வழங்கலுக்கான ஏற்பாடு, மற்றும் தொழில் சார் பயிற்சி நிறுவனங்களை தரமுயர்த்துதல் போன்றவற்றிற்கு பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் விசேட பண்புகளை எடுத்துக் கொண்டால், 2000 ஆம் ஆண்டுக்கு முதலில் பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுடன் ஒப்பிடுகையில், விசேடமாக 2009 – 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அதிக அளவிலான சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களிலும் மற்றும் நீண்ட மீளச் செலுத்தல் காலப்பிரிவுடனுமே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கான வருடாந்த வட்டி வீதம் 0.15 சதவீதமாக இருந்ததோடு, மீளச் செலுத்தல் காலப்பிரிவானது 10 வருட தயவுக் காலப்பிரிவு உள்ளடங்கலாக 40 வருடங்களாகும்.

மூன்றாவது வேலைச்சட்டக ஏற்பாடானது 2012 – 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து ஐ அ டொ 290 மில்லியன்கள் வரை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்குவதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது. மேலும், 2012ஆம் ஆண்டில், திண்மக் கழிவுகளின் வெளியேற்றத்துக்கான வசதியளிப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணத்திற்கான ஐ அ டொ 33.5 மில்லியன்கள் மற்றும் கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரிக் கருத்திட்டம் போன்றவற்றின் ஸ்தாபிப்புக்கு அவசியமான ஐ அ டொ 26 மில்லியன்கள் போன்றவற்றுக்கு அவசியமான அர்ப்பணிப்புக்களை மேற்கொள்வதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பாதெனிய – அனுராதபுர வீதயினை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்துக்கான மொத்தத் தொகையான ஐ அ டொ 11.8 மில்லியன்களுக்கான கூட்டு நிரப்புக் கடன் உடன்படிக்கை 2012 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது.

கொரியா அரசாங்கத்தின் உபாய மற்றும் நிதி அமைச்சு, கொரியாவின் அபிவிருத்தி அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் அதன் மூலம் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை 2011ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், உயர் மட்டத்திலான மாநாட்டுக்கு 7 உயர் மட்ட அலுவலர்களும், மற்றும் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் இணைக்கப்பட்ட நிறுவனங்கள் போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 நடுத்தர / கனிஷ்ட மட்ட அலுவலர்கள் 2012 ஆம் ஆண்டில், கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதிகளையும் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினையும் அதிகரிப்பதற்கான உபாயங்கள், புதிதாகத் தோற்றம் பெற்று வரும் மனித வளத் தேவைகளை அடைவதற்கான திறன் அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் துறையின் போட்டித் தன்மையை அதிகரித்தல் போன்றவற்றுடன் தொடர்புடைய ஒரு வாரத்துக்கான கல்விப் பயணம் ஒன்றை கொரியா சியோலுக்கு மேற்கொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர்

## 2012 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

### அனுராதபுரம் - பாதெனியா வீதி அபிவிருத்தி கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோளானது பாதெனியாவுக்கும் அனுராதபுரத்துக்கும் வீதியினை அபிவிருத்தி செய்து அவற்றிற் கிடையில் அதிக போக்குவரத்து இடம் பெறக் கூடிய நிலை வருவதாகும்.

இக்கருத்திட்டமானது 80.8 கி.மீ. நீளமான பாதெனியா அனுராதபுர வீதியை அகலமாக்கி, திருத்தி இடையில் இருவழி வசதியுள்ள வீதியாக்குவதோடு நகர்ப்புற இடங்களில மேலதிகமாக நான்கு வழி வீதிகளையும் உள்ளடக்கியுள்ளது. . இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவானது ஐ. அ .டொ. 70 மில்லியனாயிருக்க அதற்கு கொரியா அரசாங்கம் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் ஊடாக ஐ அ டொ 55 மில்லியன்களைச் சலுகை முறையிலான கடனாக வழங்கியுள்ளது.

இக்கருத்திட்டத்தின் நேரடியானதும், மற்றும் மறைமுகமானதுமான விளைவுகளாக போக்குவரத்து நேரத்தைக் குறைத்தல், வாகன இயக்கச் செலவைக் குறைத்தல், போக்குவரத்து விபத்துக்களைக் குறைத்தல், அரச போக்குவரத்து சேவைகளின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் பிரதேசங்களுக்கு இடையிலான பயணிகளினதும் மற்றும் பொருட்களினதும் நகர்விற்கு வசதியளிப்பதன் மூலம் பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை வேலைச்சட்டகத்தை வழங்குதலுமாகும்.

2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை நிகழ்ந்த எதிர்பாராத பலத்த மழையின் காரணமாக இக்கருத்திட்ட வீதியின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதோடு, பலவீனமடைந்துமுள்ளது. இது கருத்திட்டத்தின் மேலதிகமான நிர்மாண வேலைகளுக்கு வழி வகுத்துள்ளதோடு, அதன் சேதமானது ஐ அ டொ 13 மில்லியன் எனவும் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் குறை நிரப்புக் கடனின் ஊடாக இதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்காக பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதி 2012இல் ஐ அ டொ 11.13 மில்லியன்களுக்கு அதிகரிக்காத கொரிய வொன்களில் குறை நிரப்புக் கடனை வழங்கியுள்ளது. 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் இக்கருத்திட்டத்தின் 98 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டது.

### றுகுணு புர நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம்

தேசிய கொள்கைத் திட்டமானது தென் மாகாணத்தில் வாழும் மக்களின் பொருளாதார, சுகாதார, மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பூர்வாங்க நோக்கத்துடன் நாட்டின் தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு விரும்புகின்றது. கிழக்கையும், மேற்கையும் இணைக்கும் முக்கியமான கப்பற் பாதையை அதில் அமைந்திருப்பதன் காரணமாக துறைமுகத்துடன் தொடர்புடைய அபிவிருத்திக்கான பாரிய ஒரு வாய்ப்பு காணப்படுவதாக இனங்காணப்பட்டிருப்பதனால், இக்கருத்திட்டம் அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. குழாய் மூலமான நீர் வழங்கல் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலமும், மற்றும் கருத்திட்டப் பிரதேசங்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதன் மூலமும் றுகுணுபுர அபிவிருத்தித் திட்டத்தினை உரிய நேரத்தில் இலகுவாகவும் நடைமுறைப்புடுத்துவதற்கு ஆதரவளிப்பதனையும், மற்றும் கருத்திட்டப் பிரதேசத்தின் கைத்தொழில் அபிவிருத்திக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செலுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது

இக்கருத்திட்டத்தின் பிரதான சேர்க்கைகளாக நீர் மூலங்களை விருத்தி செய்தல், ரிதியாகமை வாவியின் நீர் உள்ளீர்ப்பினை நிர்மாணம் செய்தல், கொக்கலயில் ஒரு நாளைக்கு 17,500 கன மீற்றர் சுத்தப்படுத்தும் நிலையம் ஒன்றை நிர்மணாம் செய்தல், 45 கி மீ நீர் பரிமாற்ற முறைமை, 4 தரை மட்ட நீர்த்தேக்கங்களின் நிர்மாணம், 4 உயர் நீர் கோபுரங்களின் நிர்மாணம், 400 கி மீ நீளமான விநியோக குழாய் வலையமைப்பு போன்றனவாகும். இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ஐ அ டொ 115.7 மில்லியன்களாக உள்ளதோடு. அத்தொகையில் ஐ அ டொ 76.3 மில்லியன்கள் கொரியா அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இக்கருததிட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படும்.

## 2013 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள்

- பாரிய குருநாகலை ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் ( தெதுறு ஓயா) – ஐ அ டொ 67.3 மில்லியன்
- ருவன்வெல்ல நீர் வழங்கல் திட்டம் - ஐ அ டொ 24 மில்லியன்
- கம்பஹாவில் நிர்வாகத் தொகுதியொன்றின் நிர்மாணம் - ஐ அ டொ 25 மில்லியன்
- வட மாகாண அலுவலகக் கட்டடத் தொகுதியின் நிர்மாணம் - ஐ அ டொ 20 மில்லியன்

# இருபக்க மேற்குப் பிரிவு

மேற்கு உலக நாடுகளிடமிருந்து இலங்கைக்கான உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவி


வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இரு பக்க மேற்குப் பிரிவின் ஊடாக திரட்டப்படுகின்றது. இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் பிரதான அபிவிருத்திப் பங்காளர்களாக ஜேர்மன், நெதர்லாந்து, சுவீடன், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெய்ன், ஒஸ்ட்ரியா, டென்மார்க், பெல்ஜியம், ரஷ்யா, கனடா, சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம், ஹங்கேரி, நோர்டிய முதலீட்டு வங்கி, நோர்டியா வங்கி மற்றும் ஐரோப்பிய முதலீட்டு வங்கி போன்றன விளங்குகின்றன.

மேலைத்தேய நாடுகளில் இருந்தும் உதவி வழங்கும் நிறுவனங்களில் இருந்தும் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நிதியின் சேர்க்கைகளும், வடிவமும் இலங்கையின் நடுத்தர வருமான பொருளாதாரம் ஒன்றுக்கான படிமுறை வளர்ச்சியுடன் 2010 இலிருந்து மாற்றமடைந்துள்ளது. குறைந்த வட்டியுடனான சலுகை அடிப்படையிலான நிதியினதும், மென் கடன்களினதும் வீழ் ச்சியுடன், இந்நாடுகளில் இருந்தும் அபிவிருத்திக்கான உதவியின் சலுகை அற்ற கடன்களையும், சலுகை அடிப்படையிலான கடன்களையும் மற்றும் ஏற்றுமதிக் கடன் வசதிகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. ஏற்றுமதிக் கடன் வசதிகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதி, பொதுவாக கடனின் மீளச் செலுத்தலுக்கு வசதி அளிப்பதற்கு போதுமான வருமானப் பாய்ச்சல்கள், அல்லது போதிய அளவிலான பொருளாதார நன்மைகளை உருவாக்கக் கூடிய வர்த்தக ரீதியாக சாத்தியமான கருத்திட்டங்களில் முதலிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மேலைத்தேய நாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற அநேகமான வர்த்தகக் கடன் உதவிகள் வீதிகள், பாலங்கள், மற்றும் குடி நீர் வழங்கல் போன்ற முன்னுரிமை பெற்ற கருத்திட்டங்களுக்கும் மற்றும் வைத்தியசாலைகளை மேம்படுத்தல் மற்றும் மக்களுக்கு தரமான உயர் தொழில்நுட்பத்தைக் கொண்ட நம்பகரமான சுகாதார பராமரிப்பு வசதிகளை மக்களுக்கு வழங்கும் நோக்குடன் சுகாதார பராமரிப்பு வசதிகளை விருத்தி செய்தல் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அவசர மற்றும் முன்னுரிமை பெற்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிதியீட்டம் பிரதானமாக i. ஏற்றுமதிக் கடன்கள், ii. வர்த்தகக் கடன்கள் iii. மரபு ரீதியான கடன் உதவி iv நன்கொடை உதவி வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏற்றுமதிக் கடன்களின் கீழான வெளிநாட்டு நிதியீட்டம் அடிப்படையாக வர்த்தக ரீதியாக போதிய அளவு பொருளாதார நன்மைகளையும் மற்றும் அல்லது கடன் மீளச் செலுத்தல்களை உள்ளடக்கக் கூடிய வகையில் வருமானப் பாய்ச்சல்களை உருவாக்கக் கூடிய கருத்திட்டங்களில் முதலிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டிற்கான இலங்கைக்கான மேலைத்தேய நாடுகளிலிருந்தான நிதி உதவியின் அர்ப்பணிப்புக்களையும் பகிர்வுகளையும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவை முறையே 88 சதவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. இப்போக்கிற்கான பிரதான காரணம், கடனைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் சாதகமான நியதிகளுடனான குறைந்த செலவுடனான நிதி மூலங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் வழிகாட்டுவதன் மூலம் பாதுகாப்பானதும் நெகிழ்ச்சியுடையதுமான வெளிநாட்டு நிதியீட்ட உபாயத்தினை பயன்படுத்தியமையாகும். ஏனைய பல பக்க அபிவிருத்திப் பங்காளர்கள் போன்ற சலுகை அடிப்படையிலான நிதி மூலங்கள் வரையறுக்கப் பட்டிருந்தமையும் மேலைத்தேய நாடுகளிலிருந்தான அர்ப்பணிப்புக்களின் அதிகரிப்புக்குக் காரணமாகும்.

நிதியீட்ட அர்ப்பணிப்புக்களும் பகிர்வுகளும் - 2005 to 2012 (ஐ அ டொ மில்லியன்)




| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அர்ப்பணிப்புக்கள் | 513 | 396 | 337 | 439 | 138 | 442 | 124 | 229 | 2,618 |
| பகிர்வுகளும் | 186 | 278 | 264 | 318 | 295 | 345 | 166 | 168 | 2,015 |

## 2012 இல் அர்ப்பணிப்புக்கள்

2012 ஆம் ஆண்டில் பின்வரும் கருத்திட்டங்கள் ஏற்றுமதிக் கடன்கள் மற்றும் வர்த்தகக் கடன் வசதிகளின் கீழான வெளிநாட்டு நிதியீட்ட உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ( ஐ அ டொ மில்லியன்) |
|---|---|---|
| பிரான்ஸ் | தேசிய வீதி வலையமைப்பில் 46 பாலங்களை நிர்மாணித்தல் | 28.0 |
| நெதர்லாந்து | அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி | 55.5 |
| நெதர்லாந்து | நுவரெலியா பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி | 46.9 |
| ஜேர்மன் - கேஎப்டப்ளியு | மகமோதரை மகப்பேற்று வைத்தியசாலையின் பூர்த்தி | 34.4 |
| ஸ்பெய்ன் | வேயங்கொடை மேம்பாலம் | 14.2 |
| எச்எஸ்பீசீ – ஐஇ | கிராமியப் பாலங்கள் (210) - கொள்வாளர்களின் வசதியளிப்பு | 44.0 |
| ஜேர்மன்- ஜீஐஇஸட் *(நன்கொடை)* | இலங்கையின் வடக்கில் தொழில்சார் பயிற்சி நிறுவனம் | 5.3 |
| ஐக்கிய அமெரிக்கா *(நன்கொடை)* | சமூக ஒன்றிணைப்பிற்கான பங்கேற்பினைப் பலப்படுத்தல் | 1.4 |
| ஐக்கிய அமெரிக்கா *(நன்கொடை)* | சமனான வளர்ச்சியின் அதிகரிப்பு | 3.7 |
| ஜேர்மன்- ஜீஐஇஸட் *(நன்கொடை)* | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி | 0.3 |
| | **மொத்தம்** | **233.7** |

## 2012 இல் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐ அ டொ மில்லியன் |
|---|---|---|
| நெதர்லாந்து (ஏற்றுமதிக் கடன்கள்) | நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கையின் தேசிய இரத்தமேற்றல் சேவையை தரமுயர்த்தல் | 32.64 |
| | புறக்கருவிக் காடி தேசிய இரத்தமேற்றல் சேவையை தரமுயர்த்தல் | 24.23 |
| ஸ்பெய்ன் (ஏற்றுமதிக் கடன்கள்)) | பாரிய இரத்தினபுரி நீர் வழங்கல் – திட்டம் 1 | 28.73 |
| ஒஸ்ட்ரியா *(மென் கடன்)* | இலங்கையின் தேசிய வைத்தியசாலைகளின் இருதயம் தொடர்பான அலகுகளுக்கான இருதயப் பரிசோதனைக் குழாய் முறைமைகள் 2 இனை வழங்கல், பொருத்துதல், பரீட்சித்தல், மற்றும் அது தொடர்பான பயிற்சியை அளித்தல், எதிரொலிக்கக் கூடிய இதயத் துடிப்பு விரைவி இயந்திரங்கள் | 2.92 |
| | மகியங்கனை நீர் வழங்கல் கருத்திட்டம் | 12.79 |
| | கண்டி உயர் தர தொழில்நுட்ப நிறுவனத்தினை விருத்தி செய்தல் | 9.20 |
| ஜேர்மன் - ஜீ ஐ இஸட் *(நன்கொடை)* | சிநதெ அபிவிருத்தி | 3.69 |
| எச்எஸ்பீசீ டென்மார்க் (ஏற்றுமதிக் கடன்) | வரையறுக்கப்பட்ட மில்கோ தயாரிப்புத் தொழிற்சாலையினை நவீனமயப்படுத்தல் | 45.00 |
| ஐமுவ *(கடன் வரிசை)* | பச்சை சக்தி தொடர்பான உலகளாவிய கடன் | 110.70 |

## 2012 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

### கிராமியப் பிரதேசங்களில் 210 இரும்புப் பாலங்களின் நிர்மாணம்

நாடு பூராவும் 6- 30 மீற்றர்களிலிருந்து நீளத்தில் வேறுபட்ட 210 இரும்புப் பாலங்களை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 2012 ஆம் ஆண்டில் ஐ க்கிய இராச்சியத்தின் ஹொங்கொங் சாங்ஹாய் வங்கியிடமிருந்து பாபிப 28 மில்லியன்களை கடன் வசதியளிப்பொன்றாக பெற்றுக் கொண்டது. இக்கருத்திட்டம் பின் தங்கிய பிரதேசங்களுக்கு பிரவேசிப்பதற்காக வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் பல கிராமியப் பிரதேசங்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கு வசதியளிக்கும். எனவே, கிராமியச் சமூகங்கள் விருத்தியுற்ற அடைவுகள் மூலம் பாரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதோடு, பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான சிறந்த வாய்ப்புக்களும் அவர்களுக்கு கிடைக்கும். இக்கருத்திட்டத்தினை 2013 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகக் கருத்திட்டம்

திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டு யூரோ 59 மில்லியன் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவில், நெதர்லாந்து அரசாங்கம் அதன் நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி தொடர்பான ஏற்றுமதிப் பரிமாற்ற (ORET) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யூரோ 17.3 மில்லியன்களை வழங்கியுள்ளது. எஞ்சிய யூரோ 33,748,740 வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் சாங்ஹாய் வங்கியினால் ஏற்றுமதிக் கடன் வரிசையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்கம், இது தொடர்பான சுமார் யூரோ 8 மில்லியன்களுக்குப் பங்களிப்புச் செலுத்தியுள்ளது. முன் மொழியப்பட்ட இம்மீன்பிடித் துறைமுகம் பல்வேறு அளவுகளைக் கொண்ட 490 மீன்பிடிப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கான தங்குமிட வசதிகளைக் கொண்ட 1100 மீற்றர்

நீளமான கற்பாறைகளிலான அலைதாங்கியுடனான 13 ஹெக்டேயர் துறைமுகத்தனைக் கொண்டிருக்கும். அது மீன் பிடித்தல், பெற்றுக் கொள்ளல், சுத்தம் செய்தல், ஏலம் போடுதல் போன்றவற்றிற்கான கட்டடம், குளிரூட்டும் களஞ்சியங்கள், குளிரூட்டும் வசதிகள், பனிக்கட்டிப் பொறிகள், மீன்பிடி நடவடிக்கைகள், கப்பற் திருத்தத்துக்கும் மற்றும் பயன்பாட்டுக்குமான கப்பற் இறங்கு துறை சாய் மேடைகளுக்குமான கட்டடங்கள் போன்ற வசதிகளையும் கொண்டிருக்கும்.

இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலானது, மீன் உற்பத்தியின் விருத்திக்கும், நாட்டின் மீன் ஏற்றுமதிக்கும் பங்களிப்புச் செலுத்துவதோடு, மீனவக் குடும்பங்களுக்கு நீண்ட காலத்திற்கு நன்மை பயக்கும். மேலும், திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணிக்கும் கால கட்டத்தில் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புக்கள் அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கக் கூடிய வகையில் மேற்கொள்ளப்படலாம். இது தென் ஆசியாவின் பாரிய ஒரு மீன் பிடித் துறைமுகமாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

### தேசிய வீதி வலையமைப்பின் மீதான 46 பாலங்களை புனர் நிர்மாணம் செய்தல்

2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மேற்கு, தெற்கு, ஊவா, சப்ரகமுவா, மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் 46 பாலங்களை புனர் நிர்மாணம் செய்யும் பணியை ஆரம்பிப்பதற்கு யூரோ 22 மில்லியன் கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் பிரான்ஸ் அரசாங்கத்துடன் முடிவு செய்யப்பட்டது. தேசிய வீதி வலையமைப்பின் மீதான கட்டமைப்பில் பலவீனமான இக்குறுகிய பாலங்களை மாற்றும் நடவடிக்கையானது வீதி வலையமைப்பின் இணைப்பினை விருத்தி செய்யும் அதே வேளை, போக்குவரத்து நெருக்கடியையும், மற்றும் போக்குவரத்து விபத்துக்களையும் குறைப்பதற்கு உதவும்.

### அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா பொது வைத்தியசாலைகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா பொது வைத்தியசாலைகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் நெதர்லாந்து ரபோ வங்கியின் யூரோ 78 மில்லியன் நிதி வசதியளிப்புடன் ஆரம்பிக்கப்பட்டன. 800 புதிய கட்டில்கள், நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை உள்ளடக்கிய ஒன்பது மாடிக் கட்டடத் தொகுதியானது அம்பாந்தோட்டையிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வாழும் கிட்டத்தட்ட 675,000 மக்கள் உயர் தரத்திலான சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழி வகுக்கும். நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை உள்ளடக்கிய 600 புதிய கட்டில்களைக் கொண்ட புதிய நான்கு மாடிக் கட்டடத் தொகுதியைக் கொண்ட நுவரெலியா வைத்தியசாலையினால் மலைப் பிரதேசத்தில் உள்ள கிட்டத்தட்ட 700,000 மக்கள் இதன் மூலம் நன்மை அடைவார்கள்.

# மனித வள அபிவிருத்தியும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் பிரிவு

## ஐக்கிய நாடுகள் நிறுவனங்களின் பிரிவு

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கீழ் செயற்பட்டு வரும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி, (IFAD), ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி (UNICEF), உலக சுகாதார அமைப்பு (WHO), உலக உணவு அமைப்பு (WFP), ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி (UNFPA), ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR), ஐக்கிய நாடுகள் வீடமைப்பு மற்றும் சர்வதேச தொழில் அமைப்பு போன்ற அமைப்புக்களுடன் இலங்கை வினைத் திறனான ஒரு உறவு முறையை கட்டியெழுப்பியுள்ளது. இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் உதவி பிரதானமாக நன்கொடை வடிவத்திலேயே கிடைக்கப் பெறுகின்றது. ஆயினும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியினால் வழங்கப்படும் வெளிநாட்டு நிதி சலுகை அடிப்படையிலான கடன்களின் ஊடாகவே வழங்கப்படுகின்றது

ஒவ்வொரு ஐந்து வருட காலப்பிரிவிற்கும், ஐக்கிய நாடுகள் நிறுவனமும், இலங்கை அரசாங்கமும் ஒன்றிணைந்து எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கருத்திட்டங்களை வகுத்து, அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கொள்கை வேலைச் சட்டகத்தை (UNDAF) தயாரிக்கும். அதன் பிரகாரம், 2013 – 2017 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவிக் கொள்கை வேலைச் சட்டகமானது (UNDAF) ஐக்கிய நாடுகளின் ஆதரவளிக்கப்பட்ட கருத்திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அரசாங்க அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதற்கான உபாய ரீதியான வழிகாட்டலை வழங்குவதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்துக்கும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

## 2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள்

2008 – 2012 ஆம் ஆண்டுகளுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி உதவிக் கொள்கை வேலைச் சட்டகத்தை (UNDAF) அடிப்படையாகக் கொண்டு, விவசாயம், கல்வி, சுற்றாடல், அனர்த்த நிவாரணம், நீர், கிராமிய மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் நடைமுறைப்படுத்துவதற்கான முன்னுரிமை பெற்ற கருத்திட்டங்களும், நிகழ்ச்சித் திட்டங்களும் இனங்காணப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ 27.9 மில்லியன்களாக இருந்ததோடு, அதே ஆண்டில் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ அ டொ. 26 மில்லியன்களாகும்.


**2012 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்கள் (ஐ. அ. டொ. மில்லியன்)**

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டத்தின் பெயர் | | தொகை (ஐ. அ. டொ. மில்லியன்) |
|---|---|---|---|
| ஊவிநி (FAO) | வெலிகமை தென்னைம் ஓலை வாடும் நோய் ஒள்றிணைக்கப்பட்ட முகாமைத்துவக் கருத்திட்டம் | | 0.30 |
| | கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவுப் பிரதேசங்களில் நீர்ப்பாசன மற்றும் விவசாய வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டம் | ; | 5.10 |
| IFAD | இரனைமடு நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டம் | | 22.20 |
| உஉந WFP | நீடித்து நிலைத்து நிற்கும் நிவாரணமும், மீளடைவின் செயற்பாடும் | | 27.96 |
| ஐநா அநி | சமூக வன வள நிகழ்ச்சித் திட்டம் | | 4.79 |
| ஐநாஅஉஸ் | இலங்கையின் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் திரும்புவதற்கும், மீள ஒன்றிணைப்பதற்குமான உதவி | | 0.08 |

## 2012ஆம் ஆண்டின் பகிர்வுகள்

பின்வரும் வரைபடத்தில் காட்டியுள்ளது போல, 2012ஆம் ஆண்டில் முதலாவது உயர்வான பகிர்வாக 39.5 சதவீதப் பகிர்வு ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியினாலும் மற்றும் இரண்டாவது உயர்வான பகிர்வான 24.6 சதவீதப் பகிர்வு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியின் கீழான கருத்திட்டங்களினாலுமே அறிக்கையிடப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட பகிர்வு அண்ணளவாக 14.6 சதவீதத்தினை அறிக்கையிட்ட அதே வேளை, முறையே உணவு மற்றும் விவசாய நிறுவனமும் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் அண்ணளவாக ஐ அ டொ 4.1 மில்லியன்களாகவும், மற்றும் ஐ அ டொ 3.6 மில்லியன்களாகவும் இருந்தன.

**2012 இன் பகிர்வுகள் (ஐ. அ. டொ. மில்லியன்)**



## 2012ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

2012ஆம் ஆண்டில் மீன்பிடி, கால்நடை, சுற்றாடல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தித் துறைகளுடன் தொடர்புடைய பின்வரும் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

**2012ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்**

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டத்தின் பெயர் | தோகை (ஐ. அ. டொ. மில்லியன் ) |
|---|---|---|
| ஊவிநி (FAO) | இலங்கையின் வடக்கின் உணவுப் பாதுகாப்பும், வாழ்வாதார அபிவிருத்தியும் | 2.03 |
| | வடக்கின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட உள நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களல் தம் இருப்பிடங்களுக்கு மீண்டும் திரும்புவோருக்கான அத்தியாவசியமான விவசாய உள்ளீடுகளின் அவசர ஏற்பாடு | 6.20 |
| ஐநாஅநி (UNDP) | இலங்கையில் பங்கேற்பின் ஊடாக அனர்த்த இடர் முகாமைத்துவம் | 1.50 |
| | ஊள்ளூராட்சி நிகழ்ச்சித் திட்டம் | 1.80 |
| | நிறுவன ரீதியான பலப்படுத்தல் (கட்டம் VIII) | 1.40 |
| | ஊழலுக்கு எதிரான முயற்சிகளுக்கான ஆதரவும், நடவடிக்கையும் (SEAAC) | 0.10 |
| | தெற்கு தெற்கு ஒருங்கிணைப்பின் ஊடாக இயலளவுக் கட்டமைப்பு | 0.20 |

## இலங்கை சோமாலியாவுக்கும், கிழக்கு ஆபிரிக்காவுக்கும் அரிசியை நன்கொடையாக வழங்கல்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான முதலாவது அரிசி நன்கொடையை இனங்கண்டு, இலங்கை அரசாங்கம் இலங்கையின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சோமாலியாவிலும், தென் ஆபிரிக்காவிலும் உள்ள வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மொத்தம் 10,000 மெட்ரிக் தொன் வெள்ளை அரிசியை நன்கொடையாக வழங்கியது. எதியோப்பியாவில் அமைந்துள்ள முகாம்களில் உள்ள சோமாலிய அகதிகளுக்கு முக்கியமாக அவசியமான உணவு மற்றும் போசாக்கு உதவிகளை வழங்கும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் முயற்சிகளுக்கு இந்நன்கொடை ஆதரவளித்தது. ஐ அ டொ 4 மில்லியன் சந்தைப் பெறுமதிக்குச் சமனான 500 மெட்ரிக் தொன் அரிசியின் முதலாவது கப்பலேற்றல் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இலங்கையின் நீடித்து நிலைத்து நிற்கும் நிவாரண மற்றும் மீட்புச் செயற்பாட்டின் ஊடாக இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவுவதற்கு 500 மெட்ரிக் தொன் சிவப்பு அரிசியை வழங்குவதற்கு அரசாங்கம் வாக்குறுதியளித்தது.

## 2012 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

### சமூக வன வள நிகழ்ச்சித் திட்டம்

வன வள உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்கும், மற்றும் இலங்கையின் உலர் வலயத்தில் வாழும் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் 2012 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினாலும், மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினாலும் ஒன்றிணைந்து சமூக வன வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டம் 23,000 ஹெக்டேயர் மேலதிகமான காடுகளை உருவாக்குவதனையும், சுமார் 90,000 கிராமிய மக்களின் வருமானத்தை அதிகரிப்பதனையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும், வன வளங்களில் தங்கியிருப்பதனை குறைக்கும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சித் திட்டம பிரதானமாக தேனீ வளர்ப்பு, நெல் மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை, பழத் தோட்டங்கள், கைவினைப் பொருட்கள், மற்றும் கால்நடை அபிவிருத்த 'போன்றவற்றுக்கு நுண்நிதியினை வழங்குகின்றது.

இக்கருத்திட்டத்துக்காக ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சத் திட்டத்தின் ஊடாக அவுஸ்திரேலிய உதவியினால் மொத்தம் ஐ அ டொ 4.79 மில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளதோடு. இக்கருத்திட்டத்தினை 2016 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

## நீடித்து நிலைத்து நிற்கும் நிவாரண மீட்புச் செயற்பாடு (PRRO)

வாழ்வாதாரத்தை மீளப் பெறுவதற்கும், சொத்துக்களை மீட்பதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதே வேளை, தம் இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குயேற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதுமே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளையும், அவர்களின் முன் மீட்புத் தேவைகளை உள்ளடக்கவும் இக்கருத்திட்டம் எதிர்பார்க்கின்றது.

இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ஐ அ டொ 27 மில்லியன்களாகும். இக்கருத்திட்டத்துக்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் உதவி வழங்குவதோடு, வட மாகாணத்தின் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட பயனாளிகள் 176,000 மாக இருக்கும்.

## இரனைமடு நீர்ப்பாசனக் கருத்திட்டம் (IIDP)

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி, இரனைமடு நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் விவஉ 14.35 மில்லியன்களை (அண்ணளவாக ஐ அ டொ 22.2 மில்லியன்கள்) வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, இக்கடன் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி உடன்படிக்கை இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிக்கும் இடையில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் 30 கி மீ நீளமான பிரதான வாய்க்கால்கள், 35 கி மீ நீளமான கிளை மற்றும் விநியோகக் கால்வாய்கள், 125 கி மீ நீளமான களக் கால்வாய்கள், மற்றும் இரனைமடு வாவியின் நீரோட்டத் திசையில் 95 கி மீ நீளமான வடிகால் கால்வாய்கள் உட்பட நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை புனருத்தாரணம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இதன் மூலம் கிளிநொச்சியில் விசாய உற்பத்தியினையினையும் மற்றும் சந்தைப்படுத்தலையும் விருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2013 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்

ஐக்கிய நாடுகளின் உதவியின் கீழ் 2013 இல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கிரதான கருத்திட்டங்களின் பட்டியல்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

2013 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை (ஐ அ டொ மில்லியன்) |
|---|---|---|
| ஐ நா அ நி (UNDP) | சட்ட அமுலாக்கல் , நீதிக்கான அடைவு, மற்றும் சமூக ஒன்றிணைப்பினை பலப்படுத்தல் | 11 |
| | உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கான ஆட்சி | 30 |
| உவிநி (FAO) /ஐநாஅநி (UNDP) /ஐ நா சு நி (UNEP) | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வன வளங்களின் அழிப்பதனாலும், வன வளங்களை அழிப்பதனாலும் வன வளங்களின் தரம் குறைவடைவதனாலும், ஏற்படும் வெளிப்படுத்துகைகளைக் குறைத்தல் (UNREDD) | 4 |
| உஉநி (WFP) | காலநிலை மாற்றத்தினையும், இலங்கையின் மகாவலி ஆற்றங்கரையில் வாழும் ஒரங்கட்டப்பட்ட விவசாய சமூகங்களையும் இனங்காணல் | 7 |

## நிகழ்நிலையிலான தன்னியக்கவாளர்களின் சேவை

அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்திச் செயன்முறைக்கான தன்னியக்கவாளர்களைத் திரட்டுவதற்கான ஒருங்கிணைப்புச் சாதனங்களுள் ஒன்றாக ஐக்கிய நாடுகள் தன்னியக்கவாளர்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் நிகழ்நிலையான தன்னியக்கவாளர்களின் சேவை விளங்குகின்றது. இச்சேவை விசாலமான அறிவுச் சேர்மம் ஒன்றையும், மற்றும் சேவையைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களுக்கான வளங்களையும் வழங்குகின்றது. நிகழ்நிலையிலான தன்னியக்கவாளர்கள் பெறுமதியான திறன்களையும், நிபுணத்துவத்தினையும் மட்டுமல்லாது பல்வேறு பின்புலன்களிலிருந்தும் மற்றும் கலாச்சாரங்களிலிருந்தும் புதிய அபிப்பிராங்களையும் மற்றும் எதிர்காலத்தில் புதிய வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

## விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி (IFAD)

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி 1978 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் பிரதான அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக விளங்கி வந்துள்ளது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியானது கிராமியப் பிரதேசங்களில் உள்ள 550,000 கிராமியக் குடும்பங்களுக்கு நன்மைகளை அளிப்பதன் மூலம் வறுமை ஒழிப்புக் கருத்திட்டங்களுக்கு சுமார் ஐ அ டொ 400 மில்லியன்கள் நிதி உதவியினை வழங்குவதன் மூலம் இலங்கையின் பலம் வாய்ந்த ஒரு அபிவிருத்திப் பங்காளராக மாறியுள்ளது.

2012 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | செலவு (ஐ அ டொ மில்லியன) |
|---|---|
| **கடன்கள்** | |
| உலர் வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்கேற்பு நிகழ்ச்சித் திட்டம் (2005-2012) | 23 |
| சுனாமிக்குப் பின்னரான கரையோர புனருத்தாரணமும், மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமும் (2006-2013) | 24 |
| சிறு உடமை பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2007-2014) | 23 |
| தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சிதி திட்டம் (2010-2015) | 25 |
| இரனைமடு நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டம் (2012-2017) | 22 |
| **நன்கொடைகள்** | |
| கிழக்கு மாகாணத்தின் பங்கேற்புக் கரையோர வலய மீட்பும், நிலையான முகாமைத்துவமும் | 7 |

## 2012 இன் விசேட நிகழ்வுகள்

- அக்டோபர் 2012 – 2013 – 2017 ஆண்டு காலப்பிரிவிற்கான ஐநாஅஉவேச (UNDAF) இலங்கை அரசாங்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.
- அக்டோபர் 2012 – திரு அஜே சீபர், ஐ நா உதவிச் செயலாளர் நாயகம் இலங்கைக்குச் சமூகமளித்ததோடு, புதிய ஐநாஅஉவேச (UNDAF) இனைக் கைச்சாத்திடும் உற்சவத்திலும் கலந்து கொண்டார்.

## மனித வள அபிவிருத்திப் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடு தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் இரு பக்க மற்றும் பல பக்க அபிவிருத்திப் பங்காளர்களினால் வழங்கப்படும் சகல வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களையும் நிர்வகிப்பதாகும். அதற்கு மேலதிகமாக, உற்பத்தித் திறன் வாய்ந்த தீர்மானங்களை எடுப்பதன் ஊடாக அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவது மாத்திரமன்றி வினைத் திறன் வாய்ந்ததும், உற்பத்தித் திறன் வாய்ந்ததுமான சேவைகளை மக்களுக்கு வழங்கும் பொருட்டு அரசாங்கத் துறையின் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்குப் பதிலாக தேசிய கேந்திரஸ்தானமாக இப்பிரிவு தொழிற்படுகின்றது.

அதன் பிரகாரம், பல்வேறு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் வெளிநாட்டுப் பயிற்சிகளை திரட்டுவதும், மற்றும் அப்பயிற்சி வாய்ப்புக்களை நிரல் அமைச்சுக்கள், அவற்றின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், மாகாண சபைகள், மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடையில் விநியோகிப்பதும் மனித வள அபிவிருத்திப் பிரிவின் பிரதான பொர்றுப்புக்களுள் ஒன்றாக விளங்குகின்றது. வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களின் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கேந்திரஸ்தானம் என்ற வகையில் மனித வள அபிவிருத்திப் பிரிவானது, பொருத்தமான விண்ணப்பதாரர்களை இனங்காண்பதில் அபிவிருத்திப் பங்காளர்களுக்கு இடையிலும், நிரல் அமைச்சுக்களுக்கு இடையிலும் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு வருகின்றது. இப்பணியின் சீரான தொழிற்பாட்டுக்கும், இப்பணியின் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புத் தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கும், அதன் வினைத்திறனை விருத்தி செய்வதற்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பான சகல தகவல்களையும், தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாகவும் பதிவதற்கான ஒரு தரவு அடிப்படையைப் பேணி வருகின்றது. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், அமைச்சுக்கள், அவற்றின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் வெளிநாட்டு பயிற்சி தொடர்பான தேவைப்பாடுகளை இனங்காண்பதற்கான கேள்வி அளவை ஒன்று நடாத்தப்படும். இவ்வளவையின் ஊடாக சேகரிக்கப்படும் தரவு, தரவு அடிப்படையில் உள்ளடக்கப்பட்டு, அதன் பின்னர் அபிவிருத்திப் பங்காளர்களினால் வழங்கப்படும் பயிற்சிகளுக்குப் பொருத்தமான நிறுவனங்கள் தெரிவு செய்து வழங்கப்படும்.

தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 இற்கும் அதிகமான அபிவிருத்திப் பங்காளர்களினால் வருடாந்தம் அண்ணளவாக நீண்ட கால (எட்டு மாதங்கள் அல்லது அதற்கு மேலதிகமான காலம்) மற்றும் கிட்டத்தட்ட 600 இற்கும் அதிகமான குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக்கப் பெறுகின்றது. 2012 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கிடைக்கப் பெற்ற வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளன

**பயிற்சி வாய்ப்புக்கள்**

| அபிவிருத்திப் பங்காளர் | பயிற்சி வாய்ப்புக்களின் அளவு | |
|---|---|---|
| | நீண்ட கால | குறுகிய கால |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | - | 72 |
| கொழும்புத் திட்டம் | - | 33 |
| தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான பொதுநல வாய நாடுகளின் நிதி | - | 43 |
| அவுஸ்திரேலியா | 18 | - |
| பிறேசில் | - | 5 |
| சீனா | 3 | 81 |
| ஜப்பான் | | 3 |
| சிங்கப்பூர் | - | 66 |
| மலேசியா | | 8 |
| தாய்லாந்து | 6 | 32 |
| கொரியா | 10 | 146 |
| இந்தியா | - | 64 |
| ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 17 | 137 |
| சார்க் செயலகம் | - | 9 |
| உலக வங்கி | | 10 |
| ஈரான் | | 5 |
| இந்தோனேசியா | | 7 |
| ஏனைய நாடுகள் | - | 4 |
| மொத்தம் | 54 | 725 |
| **மொத்தம்** | 779 | |

அதன் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் மொத்தம் 779 வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, அவற்றில் 54 வாய்ப்புக்கள் நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களாகவும், எஞ்சியவை குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன.

வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களில் அதிக அளவிலானவை அதாவது நூற்றுக்கு 20.15 சதவீதமானவை ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவையாகும். ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள், 140 குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களையும் மற்றும் 17 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன. கொரியா அரசாங்கம், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக 146 குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களையும், மற்றும் 10 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது. 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் 20 சதவீதத்தினை அவை பிரதிநிதித்துவப்படுத்தின. 2012 ஆம் ஆண்டில், சீன அரசாங்கம் 81 குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களையும், மற்றும் 03 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளதோடு (மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 10.78 சதவீதம்), ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும், மற்றும் சிங்கப்பூர் அரசாங்கத்தினாலும் இவ்வாண்டில் இந்நாட்டிற்கு வழங்கப்பட்ட மொத்த வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் முறையே 9 சதவீதமாகவும், 8 சதவீதமாகவும் குறிப்பிடத்தக்க அளவில் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்ற நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களை எடுத்து நோக்கும் போது, முதுமாணிப் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் நடுத்தர மற்றும் கனிஷ்ட மட்டத்திலான அரச உத்தியோகத்தர்களின் எதிர்கால தொழில் சார் அபிவிருத்திக்கு அவசியமான கல்விசார் உத்தியோகபூர்வ திறன்களையும், ஆய்வு ரீதியான திறன்களையும், மற்றும் தீர்மானங்களை எடுக்கக் கூடிய திறன்களையும் விருத்தி செய்யும் நோக்குடனே வழங்கப்பட்டுள்ளன. சிரேஷ்ட மட்டத்திலும் மற்றும் நடுத்தர மட்டத்திலும் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடம் தற்போது காணப்படும் அறிவினை விருத்தி செய்வதற்காக மாத்திரமன்றி குறிப்பிட்ட துறைகளின் திறன்களை உயர்வடையச் செய்வதற்குமே குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்கள், மாநாடுகள், மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சி வாய்ப்புக்களில் அநேகமானவை உலகின் பிரதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களினாலும் மற்றும் பல்கலைக்கழகங்களினாலுமே நடாத்தப்படுகின்றன. இப்பயிற்சி வாய்ப்புக்கள் விவசாயம், கால்நடை, கடற்றொழில், நீர்ப்பாசனம், போக்குவரத்து, சுகாதாரம், தொழில்முயற்சிகள் அபிவிருத்தி, சுற்றாடல், கல்வி, பொது நிர்வாகமும், நல்லாட்சியும், அபிவிருத்தியும், அரச கொள்கைகள் போன்ற பிரதான துறைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டில், தனிப்பட்டோருக்கான பயிற்சி வாய்ப்புக்களுக்கு மேலதிகமாக அபிவிருத்திப் பங்காளர்களினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குழுக்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிப் பாடநெறிகளும், செயலமர்வுகளும், மற்றும் கல்விப் பயணங்களும் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், பின்வரும் உத்தியோகத்தர் குழுக்களுக்கான பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் கொரியா ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டுள்ளன.

## கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குழுக்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிப் பாடநெறிகள்

- **22** உத்தியோகத்தர்களுக்கான பொருளாதார அபிவிருத்தி உபாய நிகழ்ச்சித் திட்டம் (**2012** ஜனவரி மாதம் 7 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை)
- **20** உத்தியோகத்தர்களுக்கான மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (**2012** மே மாதம் 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை)
- **20** உத்தியோகத்தர்களுக்கான கழிவு முகாமைத்துவமும் மற்றும் கழிவுப் பொருட்களை சக்தியாக மாற்றலும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (**2012** செப்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை)
- 20 உத்தியோகத்தர்களுக்கான ஆசிரியர்களின் இயலளவைக் கட்டியெழுப்பலும் மற்றும் அவர்களின் உத்தியோகபூர்வ அபிவிருத்தியும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (**2012** செப்தெம்பர் மாதம் 02 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை)

## ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட குழுக்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வாய்ப்புக்கள்

- 19 உத்தியோகத்தர்களுக்கான இளைய தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (**2012** ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை)
- **8** உத்தியோகத்தர்களுக்கான இலங்கையின் திண்மக் கழிவு முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (**2012** அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி வரை)

வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக, மனித வள அபிவிருத்திப் பிரிவினால் வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தொண்டர்களின் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் நிரல் அமைச்சுக்கள் போன்றவற்றுக்கு இடையில் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது. நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நிபுணர்களும், மற்றும் தொண்டர் ஊழியர்களும் இனங்காணப்படுவதோடு, அவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. 2012 ஆம் ஆண்டில் ஜப்பான் , கொரியா, மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களினால் சுகாதாரம், சமூக அபிவிருத்தி, விளையாட்டு, கல்வி, மொழி, ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முறையே 60, 30, 20 தொண்டர்களின் சேவைகள் இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

2006ஆம் ஆண்டு காலப்பிரிவில் நிலவிய யுத்த நிலைமைகளின் காரணமாக அவுஸ்திரேலியா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொண்டர் ஊழியர்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நிறுத்தப்பட்டாலும் கூட, பல தசாப்தங்களாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இந்நாட்டிற்கு தொண்டர் ஊழியர்களின் சேவை வழங்கப்பட்டு வந்தது. பொது மக்கள் மற்றும் பிரதேச நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் மற்றும் அவை சார்ந்த வலையமைப்புக்களைப் பலப்படுத்துவதற்காக அவுஸ்திரேலியாவின் தொண்டர் ஊழியர்களின் சேவையை வழங்குவது தொடர்பான உடன்படிக்கையினை இலங்கை அரசாங்கமும், அவுஸ்திரேலியா அரசாங்கமும் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கைச்சாத்திட்டன.

# பொருளாதார மற்றும் கொள்கை ஆய்வுப் பிரிவு

## பொருளாதார மற்றும் கொள்கை ஆய்வுப் பிரிவின் பங்கு

இப்பிரிவானது, வெளிநாட்டு உதவி ஒன்றிணைப்பினை மேம்படுத்தல், வெளிநாட்டு நிதியை ஒன்று திரட்டுதல், வெளிநாட்டு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் முகாமைத்துவம், மற்றும் அரசாங்க அபிவிருத்தி கொள்கை வேலைச்சட்டகத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட முன்னுரிமைக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கான புதிய வெளிநாட்டு நிதிய வளங்களைக் கவர்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ளது.

மேலும், இப்பிரிவானது பொதுநலவாய செயலகத்தினால் வழங்கப்பட்ட கடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமைகள் உட்பட வினைத்திறன் வாய்ந்ததும் உற்பத்தித்த திறன் வாய்ந்ததுமான தகவல் முறைமைகளை பேணி வருகின்றது.

- அரசாங்க அபிவிருத்தி முன்னெடுப்புக்களாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுககு அவசியமான நிதி வசதிகளை வழங்குவதற்கு நிரல் அமைச்சுக்களுடனும் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களுடனும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசுகளை பெற்றுக் கொள்ளல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக இத்திணைக்களத்தின் சிரேஷ்ட பணியாளரின் ஆலோசனையுடன் சாத்தியமான அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுக்குச் சமர்ப்பித்தல்.
- வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதுப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைத் தொகுதியினை தயாரித்தலும், பராமரித்தலும்.
- பல்வேறு நிரல் அமைச்சுக்களிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதிப் பிரேரணையுடனான கோரப்படாத அபிவிருத்திக் கருத்திட்டப் பிரேரணைகள் ஆராயப்பட்டதோடு, உயர் அதிகாரிகளின் ஆலோசனையுடன் அவற்றிற்கான அவதானிப்புக்களும் வழங்கப்பட்டன.
- கடன்கள் உரிய நேரத்திலும், சரியான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் நிதி அர்ப்பணிப்புக்கள், பகிர்வுகள், கடன் கையிருப்பு, மற்றும் கடன் சேவைக் கொடுப்பனவுகள் போன்றன தொடர்பாக வினைத் திறன வாய்ந்ததும் பயனுறு விளைவுகளையும் கொண்ட தகவல் பதிவுகளை பராமரித்தல்.
- இலங்கை மத்திய வங்கி, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவமும், மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம் பாராளுமன்றம், கணக்காய்வாளர் நாயகம், குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் உட்பட கடன் தரவுகளையும், மற்றும் தகவல்களின் பல்வேறு பட்ட இறுதிப் பயன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு பொதுநல வாய செயலகத்தின் கடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமையினைப் பயன்படுத்தல்.
- வெளிநாட்டு கடன்கள் மற்றும் நன்கொடைகள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- வெளியீடுகளையும், வெளிநாட்டு உதவி மீளாய்வு, செயலாற்றுகை அறிக்கை மற்றும் திணைக்களத்தின் வரவு செலவுத்திட்ட வெளியீடு ஆகியவற்றைத் தயாரித்தலும், ஒருங்கிணைத்தலும் வெளியிடலும்.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பு அத்தியாயத்திற்கான உள்ளீடுகளை வழங்குதல்.
- அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டிற்கான, நடுத்தர ஆண்டிற்கான நிதி ரீதியான பொறுப்பு அறிக்கைக்கான உள்ளீடுகளை வழங்குதல்.
- வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டுடன் தொடர்பான அவசியமான சுற்றறிக்கைகளை வெளியிடல்.
- நிதித் திட்டமிடல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பாள அமைச்சரவை அவதானங்களை சமர்ப்பிப்பதனை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டு உதவிக் கூட்டங்களையும் மற்றும் அபிவிருத்தி மாநாடுகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டுக் கடன், அபிவிருத்திப் பங்காளர்களின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள், மற்றும் திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் போன்றன தொடர்பான தகவல்களை விநியோகிப்பதற்கு திணைக்களத்தின் கணணி உள்ளிணையம் மற்றும் இணையத்தளம் http://www.erd.gov.lk ஆகியனவற்றை புதுப்பித்தலும், பராமரித்தலும்.
- வன்பொருள் மற்றும் மென்பொருள் சேவைகளை பேணுதலும், பயன்படுத்துவோரின் ஆதரவுக்காக வழங்கலும்
- தொழில்நுட்ப உதவித் தகவல் முறைமையினை பராமரித்தல்

## 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- அபிவிருத்தியில் உலகளாவிய பங்கேற்பு" தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- 2011ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- நிதித்திட்டமிடல் அமைச்சின் 2011ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பு அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இடைக்கால மற்றும் 2012ஆம் ஆண்டிற்கான அரசிறைப் பொறுப்பு அறிக்கைக்கான உள்ளீடுகளை வழங்கியது.
- மாதாந்த காசுப்பாய்ச்சல் கூட்டங்களுக்கான வெளியீடுகளை வழங்கியது.
- உதவி அர்ப்பணிப்புக்கள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பான பல்வேறு அறிக்கைகளை தயாரித்ததோடு, உயர் அதிகார சபைகளுக்கும் மற்றும் ஏனைய தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட 89 கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரப்படாத 20 கருத்திட்டங்களும் ஆராயப்பட்டதோடு, குறிப்பிட்ட நிதி மூலத்தின் மூலம் வழங்கப்பட்ட நியதிகளும், நிபந்தனைகளும் மதிப்பிடப்பட்டது. குறிப்பிட்ட நிரல் அமைச்சுக்களுக்கு 7 வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- நடைமுறையில் உள்ள கருத்திட்டங்களுக்கும் மற்றும் புதிய கருதிதிட்டப் பிரேரணைகளுக்கும் 2013 ஆம் அண்டிற்கான வெளிநாட்டு நிதியீட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு தொகுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.
- 53 வெளிநாட்டு உதவி உடன்படிக்கைகள் தொடர்பாகவும், அவற்றின் தொடர்ச்சியான திருத்தங்கள் தொடர்பான விபரங்களையும், தகவல் மற்றும் கொடுப்பனவு நிபந்தனை தொடர்பான தரவு அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது. அவ்வுடன்படிக்கைகளில் 26 கடன் உடன்படிக்கைகளாகவும், 27 நன்கொடை உடன்படிக்கைகளாகவும் இருந்தன.
- ரூபா 2,581.8 பில்லியன் பெறுமதியான (ஐ அ. டொ 20.1 பில்லியன்) கடன் கையிருப்பைப் பொருத்த வரை 717 கடன்களுக்கு அவசியமான சேவைகளை மேற்கொண்டுள்ளது.
- தற்போது நடைமுறையில் இருக்கும் 1885 கடன்களினதும், 167 நன்கொடைகளினதும் பகிர்வுகளை பதிவு செய்தது.
- 04 பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டன.
- 23 புதிய கடன்கள் ஆராயப்பட்டன.
- திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தடனான ஆண்டு முடிவுத் தரவு (2011) ஒப்பிட்டுச் சரி செய்யப்பட்டது.
- 2009 – 2011 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான வெளிநாட்டு உதவி மீளாய்வு அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதோடு, குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
- திணைக்களத்திற்கான 16 கணணிகளும் , முழுமையான ஒரு காப்பு முறைமையும் கொள்வனவு செய்யப்பட்டன.
- மீண்டும் பராமரிப்பு உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டன.
- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்திற்கான தகவல்கள் மேலேற்றப்பட்டன: கடன் புள்ளி விபரங்கள் - மாதாந்தம், வெளிநாட்டுப் பயிற்சித் தகவல்கள், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் 13 / ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் 2 / அவுஸ்திரேலியா உதவி விபரங்கள் / தொழில்நுட்ப உதவி சுற்றறிக்கை, நிகழ்ச்சத் திட்டப் பட்டியல், பத்திரிகை வெளியீடுகள், (கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வெளியீடுகள் / தொடர்பு விபரங்கள் போன்றன.
- அமைச்சுக்களையும், நிறுவனங்களையும் புதுப்பிப்பதன் மூலம் வெளிநாட்டுப் பயிற்சி முகாமைத்துவ முறைமை முகாமைத்துவம் செய்யப்பட்டது. வருடாந்த அறிக்கைக்காக பல்வேறு அறிக்கைகள் வரவு செலவுத் திட்ட அறிக்கை, கணக்காய்வு அறிக்கை மற்றும் நிறுவன தகவல்கள் ( 30 இற்கும் அதிகமானவை) தயாரிக்கப்பட்டன.

# நிதி ரீதியான மீளாய்வு பிரிவு

## செலவினம் தொடர்பான நிதி ரீதியான தகவல்கள்

இத்திணைக்களம் அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில்லை. எனவே, இத்திணைக்களம் ஈட்டிக் கொடுக்கும் நிறுவனமாக இனங்காணப்படவில்லை. 2012 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத் தலைப்பு இலக்கம் 239 இன் கீழான ஆளுக்கான வேதனாதிகள் தொடர்பான ஒதுக்கீடு எதிரான செலவினங்கள் மீதான நிதி ரீதியான தகவல்கள், ஏனைய மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவினம், மற்றும் திணைக்களத்தின் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் பின்வரும் அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆளுக்கான வேதனாதிகள்**

| | ரூபா |
|---|---|
| மூல ஒதுக்கீடுகள் | 39,350,000 |
| **கூட்டு:** | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றலகளும், மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | 0 |
| **கழி:** | |
| நிதி ஒழுங்குகள். 66 இன் கீழான மாற்றல்களும், மற்றும் குறை நிரப்பு நிதி ஒழுங்குகள். | 1,932,800 |
| **மொத்த ஒதுக்கீடு** | **37,417,200** |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 37,330,920 |

**ஏனைய மீண்டெழும் செலவுகள்**

| | ரூபா |
|---|---|
| மூல ஒதுக்கீடுகள் | 207,550,000 |
| **கூட்டு:** | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றல்களும், மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | 9,066,927 |
| **கழி:** | |
| நிதி ஒழுங்குகள். 66 இன் கீழான மாற்றல்களும், மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட ஒதுக்கீடுகள் | 3,210,415 |
| **மொத்த ஒதுக்கீடு** | **218,549,727** |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 138,718,607 |

**மூலதனச் செலவினம்**

| செலவு விடயக் குறியீடு | செலவு விடயத் தலைப்பு | ஒதுக்கீடு ரூபா. | செலவினம் ரூபா. |
|---|---|---|---|
| 2002 | பொறித் தொகுதி, இயந்திராதிகள், மற்றும் உபகரணங்களின் புனருத்தாரணங்களும், மேம்படுத்தல்களும். | 1,000,000 | 181,594 |
| 2003 | வாகனங்களின் திருத்தங்களும், மற்றும் மேம்படுத்தல்களும் | 1,200,000 | 536,867 |
| 2102 | தளபாடங்களினதும், அலுவலக உபகரணங்களினதும் கொள்வனவு | 4,000,000 | 3,784,622 |
| 2202(13) | மூலதன மாற்றல்கள் – சுவீடன் ஆலோசனை உதவி | 0 | 0 |
| 2204(21) | ஆசிய அபிவிருத்தி வங்கி சாதாரண மூலதன அதிகரிப்பு | 521,476,000 | 521,475,923 |
| 2401 | பயிற்சியும், இயலளவுக் கட்டமைப்பும் | 500,000 | 195,750 |
| 2401(13) | பயிற்சியும், இயலளவுக் கட்டமைப்பும் | 0 | 0 |
| 2502(17) | வெளிநாட்டு தூதுவர் இல்லங்களுக்கான பெசேவரியின் மீள் கொடுப்பனவு | 5,000,000 | 3,715,316 |

## முற்பணக் கணக்குகள்

இத்திணைக்களம் அரச ஊழியர்களுக்கு கடன்களை வழங்குவதற்காக முற்பணக் கணக்கொன்றை பேணி வருகின்றது. குறிப்பிட்ட ஆண்டில் இத்திணைக்களம் தனது கடன் கொடுப்பனவுகளை முற்பணக்குகளின குறிப்பிட்ட வரையறைக்குள் பேணியதோடு, அக்கணக்கு தொடர்பான செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| செலவினத்தின் உச்ச எல்லை | 5,000,000 |
| உண்மைச் செலவினம் | 4.241,921 |
| வரவுகளின் குறைந்த எல்லை | 2,880,000 |
| உண்மை வரவுகள் | 3,086,126 |
| கடன் மீதியின் உச்ச எல்லை | 32,000,000 |
| உண்மை மீதி | 17,788,270 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகள்

குறிப்பிட்ட ஆண்டில், 4 கணக்காய்வு விசாரணைகள் கிடைக்கப் பெற்றதோடு, சகல விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன. விசாரணைகள் வெளிநாட்டு உதவிகளின் பயன்பாடு, ஒதுக்கீட்டுக் கணக்குகள், மற்றும் 2011ஆம் ஆண்டில் அரச பணியாளர்களுக்கான முற்பணக் கணக்கு ஆகியவை தொடர்பாக வினவப்பட்டிருந்தன.

## 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு

2012 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

*இணைப்பு I*

## 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் (கடன்கள்)

| அபிவிருத்திப் பங்காளர் | விபரம் | உடன்படிக்கைத் திகதி | கடன் தொகை | | | நிதி நியதிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கடன் நாணயம் | | ஐ அ டொ | வட்டியின் வகை | வருடாந்த வட்டி வீதம் | | அர்ப்பணிப்புக் கட்டணம் % | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (ஆண்டுகள் ) | தயவுக் காலப் பிரிவு உட்பட முதிர்வு (வருடங்கள் ) |
| | | | நாணயம் | தொகை | | | வீதம் (%) | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | | | | |
| **பல பக்க** | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | 2012/11/19 | விவஉ (XDR) | 45,215,000 | 69,684,418 | நிலையான | 1.00 (பகிர்வுக் காலப்பிரிவில்)<br><br>1.5 (மீளச் செலுத்தற் காலப்பிரிவின் போது) | பொருத்தமற்றது | - | - | 8 | 32 |
| | வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | 2012/11/19 | ஐ அ டொ | 30,000,000 | 30,000,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 0.60 | 0.15 | - | 5 | 26 |
| உலக வங்கி - புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி | கொழும்பு மாநகர அபிவிருத்திக் கருத்திட்டம் [MCUDP] | 2012/05/18 | ஐ அ டொ | 213,000,000 | 213,000,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 0.80 | - | அடிப்படைக் கட்டணம் (0.25%) | 4 | 24 |
| உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | இ - இலங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியீட்டம் | 2012/05/01 | விவஉ (XDR) | 7,100,000 | 11,005,824 | நிலையான | 0.75 | பொருத்தமற்றது | 0.50 | - | 5 | 24 |
| | அறிவுக் கேந்திரக் கருத்திட்டம் ஒன்றிற்கான அடித்தளமாக பாடசாலை கல்வி முறைமையினை மாற்றியமைத்தல் | 2012/05/18 | விவஉ (XDR) | 64,100,000 | 100,821,980 | | 1.25<br>0.75 (சேவைக் கட்டணம்) | பொருத்தமற்றது | 0.75 | - | 5 | 24 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | இரனைமடு நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டம் | 2012/01/30 | விவஉ (XDR) | 14,350,000 | 22,032,234 | நிலையான | 0.75 | பொருத்தமற்றது | - | - | 11 | 25 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி | வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒபெக் நிதி) | 2012/10/08 | ஐ அ டொ | 40,000,000 | 40,000,000 | நிலையான | 3.1<br>1.00 (சேவைக் கட்டணம்) | பொருத்தமற்றது | - | - | 5 | 20 |

## 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் (தொடர்ச்சி) ...

| அபிவிருத்திப் பங்காளர் | விபரம் | உடன்படிக்கைகத் திகதி | கடன் தொகை | | | நிதி நியதிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கடன் நாணயத்தில் | | ஐ அ டொ | வட்டியின் வகை | வருடாந்த வட்டி வீதம் | | அர்ப்பணிப்புக் கட்டணம் % | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (ஆண்டுகள் ) | தயவுக் காலப் பிரிவு உட்பட முதிர்வு (வருடங்கள் ) |
| | | | நாணயம் | தொகை | | | வீதம் (%) | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்க | | | | |
| **இரு பக்க** | | | | | | | | | | | | |
| **சீனா** | மொறகஹகந்த அபிவிருத்திக் கருத்திட்டம் | 2012/06/28 | ஐ அ டொ | 214,200,000 | 214,200,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 2.90 | - | அடிப்படைக் கட்டணம் (5.9%) முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 4 | 16 |
| | இலங்கை கிழக்கு மாகாண மின்னொளியூட்டல் கருத்திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பு | 2012/01/16 | ஐ அ டொ | 32,496,000 | 32,496,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 3.00 | 0.25 | தீர்ப்பனவுக் கட்டணம் (5.5%) முகாமைத்துவக் கட்டணம் (0.25%) | 4 | 15 |
| | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II | 2012/09/17 | ஐ அ டொ | 51,000,000 | 51,000,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 4.00 | 0.70 | முகாமைத்துவக் கட்டணம் (0.9%) | 4 | 15 |
| | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II | 2012/09/17 | சீயு | 1,000,000,000 | 158,358,086 | நிலையான | 2.00 | பொருத்தமற்றது | 0.50 | முகாமைத்துவக் கட்டணம். (0.5%) | 6 | 19 |
| | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II | 2012/09/17 | ஐ அ டொ | 600,000,000 | 600,000,000 | நிலையான | 2.00 | பொருத்தமற்றது | 0.50 | முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 6 | 19 |
| **பிரான்ஸ்** | தேசிய வீதி வலையமைப்பு மீதான 46 பாலங்களின் புனர் நிர்மாணம் | 2012/11/05 | யூரோ | 22,050,000 | 28,287,952 | நிலையான | 0.73 | பொருத்தமற்றது | - | - | 5 | 20 |
| **ஜேர்மன்** | காலி மகமோதரை மகப்பேற்று வைத்தியசாலையின் நிர்மாணம் | 2012/08/16 | யூரோ | 28,000,000 | 34,419,001 | நிலையான | 2.20 | பொருத்தமற்றது | 0.25 | - | 2 | 12 |
| **இந்தியா** | பாரிய தம்புள்ளை நீர் வழங்கல் கருத்திட்டம் 1 | 2012/01/17 | ஐ அ டொ | 60,690,000 | 60,690,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 2.00 | 0.50 | காப்புறுதிக் கட்டணம் (6.5%) முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 3 | 14 |
| | வடக்குப் புகையிரத வீதிச் சேவைகளை மறு சீரமைத்தல் | 2012/01/17 | ஐ அ டொ | 382,370,000 | 382,370,000 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 0.50 | 0.50 | முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 6 | 20 |

## 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் (தொடர்ச்சி)...

| அபிவிருத்திப் பங்காளர் | விபரம் | உடன்படிக்கைத் திகதி | கடன் தொகை | | | நிதி நியதிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கடன் நாணயத்தில் | | ஐ அ டொ | வட்டியின் வகை | வருடாந்த வட்டி வீதம் | | அர்ப்பணிப்புக் கட்டணம் % | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (ஆண்டுகள் ) | தயவுக் காலப் பிரிவு உட்பட முதிர்வு (வருடங்கள்) |
| | | | நாணயம் | தொகை | | | வீதம் (%) | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள் | | | | |
| **இரு பக்க** | | | | | | | | | | | | |
| ஜப்பான் | ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் | 2012/03/28 | ஜப்பானிய யென் | **9,573,000,000** | 115,329,450 | | | | | - | 10 | 40 |
| | கட்டம் 1 | | | 9,187,000,000 | | நிலையான | 0.30 | பொருத்தமற்றது | 0.10 | | | |
| | கட்டம் 2 | | | 386,000,000 | | நிலையான | 0.01 | பொருத்தமற்றது | 0.10 | | | |
| | எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்தி | 2012/03/28 | ஜப்பானிய யென் | **3,935,000,000** | 47,406,392 | | | | | - | 10 | 40 |
| | கட்டம் 1 | | | 3,785,000,000 | | நிலையான | 0.20 | பொருத்தமற்றது | 0.10 | | | |
| | கட்டம் 2 | | | 150,000,000 | | நிலையான | 0.10 | பொருத்தமற்றது | 0.01 | | | |
| கொரியா | பாதெனிய – அனுராதபுரம் வீதிக் கருத்திட்டத்தின் விருத்தி (குறை நிரப்புக் கடன்) | 2012/11/02 | கொவொ | 12,926,000 | 11,820,850 | நிலையான | 0.15 | பொருத்தமற்றது | - | - | 11 | 40 |
| நெதர்லாந்து | நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி **(நெதர்லாந்து )** | 2012/04/05 | யூரோ | 35,723,788 | 46,989,283 | நிலையான | 4.94 | பொருத்தமற்றது | - | - | 3 | 12 |
| | அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி **(நெதர்லாந்து )** | 2012/04/05 | யூரோ | 42,204,783 | 55,514,061 | நிலையான | 4.94 | பொருத்தமற்றது | - | - | 3 | 12 |
| ஸ்பெயின் | வேயங்கொடை புகையிரதக் கடவை மேம்பாலக் கருத்திட்டம் (ஸ்பெய்ன்) | 2012/06/19 | யூரோ | 8,554,612 | 10,783,946 | மாறும் | யூரிபோர் (EURIBOR) 06 மாதங்கள் | 2.25 | - | முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 2 | 10 |
| | வேயங்கொடை புகையிரதக் கடவை மேம்பாலக் கருத்திட்டம் (ஸ்பெய்ன்) | 2012/06/19 | யூரோ | 2,668,565 | 3,363,993 | மாறும் | யூரிபோர் (EURIBOR) 06 மாதங்கள் | 2.75 | - | முகாமைத்துவக் கட்டணம் (0.5%) | 1 | 3 |
| அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான சவூதி நிதி | வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்- (சவூதி நிதி) | 2012/10/30 | சவூதி ரியால் | 225,000,000 | 59,924,547 | நிலையான | 2.00 | பொருத்தமற்றது | - | - | 5 | 20 |
| ஐக்கிய இராச்சியம் | 210 நிரந்தர இரும்பும் பாலங்களின் நிர்மாணம் | 2012/06/24 | ஐ அ டொ | 44,142,909 | 44,142,909 | மாறும் | ஐ அ டொலர்களுக்கு லைபோர் ( LIBOR) 06 மாதங்கள் | 2.00 | - | - | 5 | 15 |
| | | | | **Total** | **2,443,640,926** | | | | | | | |

**குறிப்பு :** அரச உடமை தொழில்முயற்சிகளுக்கு மெற்கொண்ட அர்ப்பணிப்புகள் உள்ளடக்கப்படவில்லை

***இணைப்பு 2***

## 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் (நன்கொடைகள்)

| அபிவிருத்திப் பங்காளர் | | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டத்தின் பெயர் | உடன்படிக்கைக் கைச்சாத்திடப்பட்ட நாணயத்தில் தொகை | | ரூபாவில் | ஐ அ டொலரில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | தொகை | | |
| **இரு பக்க** | **கொரியா** | 2012/12/21 | இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள தன்னியக்க நிலையங்களைத் தரமுயர்த்துதல் | ஐஅடொ | 3,000,000 | 383,659,500 | 3,000,000 |
| | | 2012/12/21 | இலங்கை நில்வளா கங்கை கரையின் திகிலி ஓயா பல நோக்கு நீர்த்தேக்கத்திற்கான சாத்திய வன வள ஆய்வும் மற்றும் விரிவான வடிவமைப்பும் | ஐஅடொ | 2,500,000 | 319,716,250 | 2,500,000 |
| | | 2012/12/21 | கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் உயர் போக்குவரத்து முகாமைத்துவ முறைமைக்கான தொழில்நுட்ப உதவி | ஐஅடொ | 2,500,000 | 319,716,250 | 2,500,000 |
| | **இந்தியா** | 2012/01/17 | வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 49000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நன்கொடை | இந்தியா ரூபா | 13,190,000,000 | 29,304,223,000 | 257,283,209 |
| | **ஜப்பான்** | 2012/03/06 | கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனருத்தாரணம் | ஜப்பானிய யென் | 677,000,000 | 1,014,349,100 | 8,318,244 |
| | | 2012/03/06 | களனிப் பலக்லைக்கழகம் மற்றும் சப்ரகமுவா பல்கலைக்கழகங்களின் ஜப்பானிய மொழிக் கற்கை உபகரணங்களின் அபிவிருத்தி | ஜப்பானிய யென | 48,400,000 | 72,517,720 | 594,687 |
| | | 2012/03/06 | கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் வழங்கல் | ஜப்பானிய யென் | 300,000,000 | 449,490,000 | 3,686,076 |
| | | 2012/05/25 | மனித வள அபிவிருத்தி புலமைப்பரிசில் | ஜப்பானிய யென் | 211,000,000 | 344,162,100 | 2,646,595 |
| | **ஜேர்மன்** | 2012/01/31 | இலங்கையின் வடக்கில் தொழில்சார் பயிற்சி நிறுவனம் | யூரோ | 4,000,000 | 599,979,600 | 5,267,600 |
| | **சீனா** | 2012/05/04 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் இளைஞர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் வழங்கல் | சீன யுவான் | 1,000,000 | 20,291,900 | 158,628 |
| | **ஐக்கிய அமெரிக்கா** | 2012/09/27 | சமூக ஒன்றிணைப்பிற்கான பங்கேற்பினைப் பலப்படுத்தல் (விரிவாக்கம்) | ஐஅடொ | 1,400,000 | 183,354,780 | 1,400,000 |
| | | 2012/09/27 | சமனான பொருளாரதா வளர்ச்சி (விரிவாக்கம்) | ஐஅடொ | 3,700,000 | 484,580,490 | 3,700,000 |
| | | 2012/04/05 | கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் நீர்ப்பாசன மற்றும் விவசாய வாழ்வாதார அபிவிருத்தி | யூரோ | 3,330,000 | 549,563,886 | 4,380,115 |
| **பல பக்க** | **புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி** | 2012/11/20 | வெள்ளம் தாக்குப் பிடிக்கும் நகரச் சுற்றாடல் ஒன்றை நோக்கிய பொழும்பு மாநகருக்கான நன்கொடை | ஐ அ டொ | 900,000 | 117,124,110 | 900,000 |
| | **சர்வதேச அபிவிருத்தி அமைப்பு** | 2012/03/22 | இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தைப் பலப்படுத்தல் [ICASL] | ஐ அ டொ | 500,000 | 65,205,950 | 500,000 |

## 2012 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் (நன்கொடைகள்)...

| அபிவிருத்திப் பங்காளர் | | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டத்தின் பெயர் | உடன்படிக்கைக் கைச்சாத்திடப்பட்ட நாணயத்தில் தொகையில் | | ரூபாவில் | ஐ அ டொலரில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | தொகை | | |
| பல பக்க | சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 2012/07/17 | உலகளாவிய உணவு நெருக்கடிக்கான பதில் நிகழ்ச்சித் திட்டம் - [GFRP] | ஐ அ டொ | 6,500,000 | 869,602,500 | 6,500,000 |
| | | 2012/11/30 | காசு மாற்றல்கள் மற்றும் பயிற்சியின் ஊடான வலது ஊனமுள்ள மக்களுக்கு உதவும் திரிசவிய கருத்திட்டம் - புதிய | ஐ அ டொ | 2,590,000 | 337,349,313 | 2,590,000 |
| | ஐநாஅநி (UNDP) | 2012/06/25 | திட்ட நடைமுறைப்படுத்தல் இயலளவை பலப்படுத்தல் - கட்டம் II (விரிவாக்கம்) | ஐ அ டொ | 13,425 | 1,783,749 | 13,425 |
| | ஐநாஅநி (UNDP) | 2012/06/25 | தென் - தென் ஒருங்கிணைப்பின் ஊடாக இயலளவுக் கட்டமைப்பு (விரிவாக்கம்) | ஐ அ டொ | 44,000 | 5,846,135 | 44,000 |
| | | 2012/06/25 | உள்ளூராட்சிக் கருத்திட்டம் (விரிவாக்கம்) | ஐ அ டொ | 3,221,567 | 428,038,976 | 3,221,567 |
| | | 2012/07/10 | இலங்கை சமூக வன வள நிகழ்ச்சத் திட்டம் | ஐ அ டொ | 4,792,988 | 639,722,026 | 4,792,988 |
| | | 2012/12/04 | திட்டத்தினை செயற்படுத்துவதற்கான உபாய ஆதரவு | ஐ அ டொ | 2,150,000 | 278,483,480 | 2,150,000 |
| | ஐ நா அஉ ஸ் (UNHCR) | 2012/03/01 | இலங்கையின உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் திரும்பலும், ஒன்றிணைத்தலும் | இலங்கை ரூபா | 5,690,000 | 5,690,000 | 46,675 |
| | | 2012/10/05 | இலங்கையின உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் திரும்பலுக்கும், ஒன்றிணைப்பிற்கும் உதவுதல் | இலங்கை ரூபா | 11,000,000 | 11,000,000 | 84,810 |
| | ஐநாசசிநி (UNICEF) | 2012/06/15 | நாட்டிற்கான நிகழ்ச்சத் திட்டம் 2008-2012 ஐநாசசிநி (UNICEF) (விரிவாக்கம்) | ஐ அ டொ | 26,000,000 | 3,433,401,400 | 26,000,000 |
| | உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் | 2012/08/21 | நீடித்து நிலைத்து நிற்கும் நிவாரண மற்றும் மீட்புச் செயற்பாடு 200143 (விரிவாக்கம்) | ஐ அ டொ | 27,960,762 | 3,696,703,528 | 27,960,762 |
| | | | | | **மொத்தம்** | **43,974,768,300** | **370,546,379** |